
ராணி
முத்து
ஆர். மணிமாலா
ரூ.6
விண்ணை
விட்டு
வா கண்ணே

# விண்ணை விட்டு வா கண்ணே





**ஆர். மணிமாலா**

**1**

**க**ல்யாணி, காமாட்சி அம்மன் விளக்கை ஏற்றி கண் மூடி வணங்கினாள்.

'என் பொண்ணுக்கு ஏத்த மாதிரி நல்ல வரன் அமையணும். நான் எப்பவும் தீர்க்க சுமங்கலியாகவே

இருக்கணும்!'

வெளியே 'டமார்' என்று இடிச் சத்தம் கேட்க, பட்டென கண் திறந்தாள்.

நேற்றெல்லாம் வலுத்துப் பெய்த மழை, இன்னமும் விடாமல் தேம்பித் தேம்பி அழுதுக்கொண்டிருந்தது.

"போதும்... அவங்களை தொந்தரவுப் பண்ணினது. வர்றியா, பசிக்குது!"

சாப்பாட்டு மேசை முன் அமர்ந்திருந்த சக்தி, தட்டில் மெல்ல தாளம் போட்டுக்கொண்டிருந்தாள்.

"என்ன... கிண்டல் பண்றியா? சாமி கும்பிடக்கூட விட மாட்டேங்கிறே?"

"என்ன கும்பிடப் போறே? பொண்ணுக்கு கல்யாணமாகணும். எப்பவும் பூவும், பொட்டோட இருக்கணும். அதுக்காக அப்பாவுக்கு கூன் விழுந்து வளைஞ்சு நடக்கணும்னுதானே?"

"அடிப்பாவி!" வாயைப் பொத்திக்கொண்டாள்.

"எப்படிடி இத்தனை சரியா சொல்றே... மனசுக்குள்ளே புகுந்து பார்த்த மாதிரி?"

"உன்னை மாதிரி பெண்களுக்கு வேற என்னம்மா வேண்டுதல் இருந்துடப் போகுது? மத்திய அரசு அதிகாரியா வேலை பார்க்கற புருஷன். 'சாப்ட்வேர் கம்பெனி'யில 'டீம் லீடரா' நாற்பதாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கற- கல்யாணமாகாத அழகான பொண்ணு! ஒரு கோடி மதிப்புள்ள சொந்த வீடு. தேவையான வசதி வாய்ப்பு, வங்கி இருப்புன்னு அமர்க்களம்மா இருக்கிற கல்யாணிக்கு வேறென்ன வேண்டுதல் இருக்கப் போவுதாம்?"

"பாரேன்... பேர் சொல்லி பேசறதை?"

"ஏன்... சொன்னா என்னவாம்?"

முழுக்கைச் சட்டையை அணிந்து- கை பொத்தானைப் போட்டுக்கொண்டே மகள் பக்கத்தில் அமர்ந்தார் கைலாசம்.

"உங்களாலதான் அவ கெட்டுப் போறா. பெத்தவங்களை பேர் சொல்லிக் கூப்பிடுறது என்ன மரியாதையாம்?"



"பேர் சொல்லத்தான்டி பிள்ளையைப் பெத்துக்கறோம்."

"அப்படி சொல்லு கைலாசம்!"

ஒரு கணம் அவர் திகைத்துதான் போனார்... மகள் அப்படிச் சொன்னதும்.

"அம்மாடி... அப்பாவையே கவுத்துட்டியே!"

"சும்மா... உங்க பொண்டாட்டிய கலாய்க்க..."

அழகாய் சிரித்த சக்தி, மலர்ந்த பூவைப்போல் கொள்ளை அழகாய் இருந்தாள். கன்னங்களில் விழுந்த சிறு குழிகளும், மோவாய் பள்ளமும் தனிப்பட்ட வசீகரத்தைத் தந்திருந்தன.

'ஹாட்பேக்'கைத் திறந்து இடியாப்பம் எடுத்து இருவரின் தட்டிலும் வைத்து தேங்காய்ப்பால் ஊற்றினாள்.

"என்ன கல்யாணி இது?"

"பார்த்தா தெரியலையா?" நக்கலாய் கேட்டாள் கல்யாணி.

"ஓ... சேமியா உப்புமாவா?" பெரிதாய் வியந்துக் கேட்டார் கைலாசம்.

பொங்கிய சிரிப்பை சக்தி உள்ளுக்குள் மென்றாள்.

கல்யாணி கோபமாய் கணவரைப் பார்த்தாள்.

"இதைப் பார்த்தா உப்புமா மாதிரியாத் தெரியுது... இடியாப்பம்."

"இதானே வேணாங்கறது. பொய்தானே சொல்றே? பாரு... உதிரி உதிரியா இருக்கு."

"நல்லாத்தானே பிழிஞ்சேன். சனியன், ஒழுங்கா வரலே? என்ன இப்ப? முழுசா அப்படியேவா முழுங்கப் போறீங்க? பிய்ச்சுதானே சாப்பிடப் போறீங்க? தென்மும் எதையாவது குறை சொல்றதே வேலையாப் போச்சு உங்களுக்கு."

முகம் சிவந்து போனாள் கல்யாணி.

"உன்னைக் குறை சொல்லலேம்மா! செய்யறதை திருத்தமா செய்யின்னுதான் சொல்றேன். கல்யாணமாகி இருபத்தி ஆறு வருஷமாயிடுச்சு! என்னைக்காவது ஒரு நாள்... என் கல்யாணியும் நல்லா சமைக்கத்தான் போறாள்னு காத்துக்கிட்டிருந்தேன்.

இன்னமும் காத்திருப்பேன்.

சரி... சரி! சக்தி... சாப்பிடும்மா!" நடிகர் திலகம் தொனியில் பேசினார் கைலாசம்.

இது நாள்தோறும் நடக்கும் கூத்துதான். மனைவியை சீண்டிப் பார்க்காவிட்டால் கைலாசத்துக்கு அன்றைய நாள் இனிதாய் இருக்காது.

"அப்ப... இத்தனை நாளும் என் சமையல் நல்லா இல்லேன்னா சொல்றீங்க?"

"ஒரேயடியா அப்படிச் சொல்லலேடா! ஏதோ சுமாரா இருக்கு."

"அநியாயமா பேசாதீங்க!"

"அப்பாவை ஏம்மா கோவிச்சுக்கறே? போன வாரம்கூட நம்ம வீட்டுக்கு வர்ற பிச்சைக்காரன், "சமைப்பது எப்படி"ன்னு ஒரு புத்தகம் வாங்கிட்டு வந்து குடுத்தான்னு... அப்பா... அப்பா நீங்கதானே சொன்னீங்க?"

அம்மா முறைப்பதைப் பார்த்ததும் சமாளித்தாள்.

"அதையும் நான் சொல்லிட்டேனா? அதைக்கூட விடு. நம்ம தெருவுல ஒரு கறுப்பு நிற நாய் இருந்துச்சே..."

"ஆமா... கொஞ்ச நாளா அதைக் காணோமே... நாய் வண்டிக்காரன்கிட்ட மாட்டிக்கிச்சா?"

"அப்படி மாட்டி இருந்தாக்கூட ஏதோ துள்ளாம-துடிக்காம மேலே போய் சேர்ந்திருக்கும். சித்திரவதைப்பட்டு செத்ததும்மா!"

"எப்படிப்பா?"

"அதை உங்க அம்மாவையே கேளு!"

சங்கடமும், கோபமும் எட்டிப் பார்க்க, "ஏன் அதையும் நீங்களே சொல்லுங்களேன்..."

முகத்தை திருப்பிக்கொண்டாள்.

"சொல்லக் கூடாதுன்னு நினைச்சாலும் விடமாட்டீங்களே! போன வாரம் உங்கம்மா புளியெல்லாம் கரைச்சு விட்டு 'மட்டன்'



குழம்புன்னு ஒரு 'அயிட்டம்' பண்ணாளே!"

"ஆமா... நான்கூட ரோஸ்லின் வீட்ல விசேஷம்னு அங்கே போய் சாப்பிட்டேன். 'மட்டன்' குழம்பை தவற விட்டுட்டேன்."

"ஆயுசு கெட்டி! மிச்சமானதை எல்லாம் அந்த நாய்க்கு போட்டிருக்கிறா... பாவம் சக்தி அது... மறுநாள் காலையில நாக்குத் தள்ளி செத்துக் கிடந்ததை பார்க்கணுமே... கொடுமை!"

"போதும் என்னை அவமானப்படுத்தினது. இனிமே இந்த வீட்ல நான் சமைக்க மாட்டேன். யாரையாவது சமையல்காரிய வச்சுக்குங்க!"

வேகமாய் சமையலறைக்குள் நுழைந்துகொண்டாள் கல்யாணி.

சாப்பிட்டு முடித்திருந்த கைலாசம் கை கழுவிக்கொண்டு சிரித்தபடி பின்தொடர்ந்தார்.

"அசிங்கமாப் பேசாதே! நான் ஏன் சமையல்காரியை வச்சுக்கணும்? ரதி மாதிரி நீ இருக்கப்ப!"

"கல்யாண வயசுல பொண்ணை வச்சுக்கிட்டு கிழவனுக்கு நினைப்பைப் பாரு."

"நான் கிழவனா?"

கணவனும். மனைவியும் கிண்டலும், கொஞ்சலும், கோபமுமாய் பேசிக்கொண்டிருக்க...

சக்தி கையைக் கழுவிக்கொண்டுதுடைத்தபடி சமையலறைக்குள் வர,

மனைவியின் கன்னத்தில் முத்தமிட்டுக்கொண்டு இருந்தார் கைலாசம்.

"சென்சார்..." என்று சக்தி குரல் கொடுக்க,

விலகினார் சங்கடத்துடன்.

"எனக்கு தம்பி வேணும்னு இப்ப நான் எந்த கோரிக்கையும் வைக்கலையே... வரட்டுமா?"

கண்ணடித்து சிரித்துவிட்டு நகர்ந்தாள்.

## 2

ஒரு வழியாய் சமாதானப்படுத்தி– சாப்பாட்டு மேசை முன் மனைவியை அமர வைத்தார் கைலாசம்.

"நீயும் சாப்பிடு கல்யாணி!"

தட்டில் எடுத்து வைத்தார்.

"இல்ல... நீங்க ஆபீசுக்கு கிளம்பின பிறகு சாப்பிட்டுக்கறேன்!" சங்கோஜப்பட்டாள்.

"ஏன்... நீ மட்டும் நல்லதா வேற 'டிபன்' செஞ்சு சாப்பிடப் போறியா?"

"திரும்பவுமா?"

சலிப்புடன் கணவனைப் பார்த்தாள்.

"சரி... சரி... கிண்டல் பண்ணலே... விடு! 'சீரியசான மேட்டருக்கு வருவோம். நேத்து சாயங்காலம் தரகர் வந்தார்னு சொன்னியே... ஜாதகம் எதுவும் கொண்டு வந்தாரா?"

"ஆமாங்க! சக்தி இருந்ததாலே அதைப் பற்றி பேசலே. எல்லாமே அருமையான இடம். கைநிறைய சம்பளம். சொந்த வீடு, அழகுன்னு ஒவ்வொண்ணுமே தவிர்க்க முடியாத வரன்தான். ஆனா, சக்தி எதிர்பார்க்கிற ஒரு விஷயம் மட்டும் இல்லே!"

"ஏன்... எல்லாரும் வீட்டுக்கு ஒத்தப் பிள்ளையா?"

"ஆமாங்க. நான் அப்படித்தானே பார்க்கச் சொன்னேன்."

"சக்திதான் அப்படி வேணாம்... வீடு நிறைய மச்சினன், நாத்தனார், ஓரக்கத்தின்னு கூட்டுக் குடும்பமா இருக்கிற இடத்துலதான் வாழப் போவேன்னு பிடிவாதமா இருக்காளே! நீயும் பிடிவாதமா உன் இஷ்டப்படி பார்க்கறே?"

"அவளுக்கு என்னங்க தெரியும்? நாமதான் புரிய வைக்கணும். இப்ப உள்ள காலகட்டத்துல புத்திசாலித்தனமா வாழ்க்கைய அமைச்சுக்க வேணாமா?"

"புரியுதும்மா. அவதான் அதுக்கும் ஆயிரம் காரணங்களை





நியாயப்படுத்திச் சொல்றாளே!"

"அவ வயசுக்கு முட்டாள்தனமா சொல்றாள்ன்னா... நம்ம அனுபவத்துக்கு சரியானதை எடுத்துச் சொல்ல வேண்டாமா? அவளைவிட நாம பிடிவாதமா இருந்தா... இறங்கி வந்துதானே ஆகணும்?"

"எனக்கென்னவோ அவகிட்ட எல்லாத்தையும் பேசித் தெளிவு படுத்திட்டு இந்த வரன் பார்க்கிற விஷயத்தை வச்சுக்கலாம்னு தோணுது. அதுவரைக்கும் கொஞ்சம் தள்ளிப் போடு!"

"பொண்ணுக்கு வயசாகுதுங்களே! 'காலண்டர்'ல ஒவ்வொரு தேதியா கிழிக்கறப்ப தெரியாது. ஒட்டுமொத்தமா கிழிச்சிட்டா ஒரு வருஷம் காணாமப் போயிருக்கும். இந்த காலத்துப் பொண்ணுங்க, கல்யாணம்னாலே ஆயிரம் நிபந்தனை போடுதுங்க. தோண்டிப் பார்த்தா அதுல அர்த்தமே இருக்காது. நம்ம சக்திக்கும் ஒரு காரணம் கிடைச்சிருக்கு. நான் பார்த்துக்கறேன். நீங்க கிளம்புங்க."

"எல்லாம் சரி... ஒண்ணை மறந்துட்டியே?"

"என்னங்க?"

"பொண்ணுக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும்னு ஆசைப்பட்டா மட்டும் போதுமா?"

"..........."

"புகுந்த வீட்ல கெட்ட பேர் வாங்காம இருக்கணும்னா, குடும்பம் நடத்த பக்குவம் வேணாமா?"

கல்யாணி ஏதும் புரியாமல் கணவனையே பார்த்தாள்.

"புருஷனை எப்படிக் கவனிச்சுக்கணும்? மாமனார், மாமியாரை எப்படித் தாங்கணும்? முக்கியமா... நல்லா சமைச்சுப் போடணும் இல்லையா? நம்ம சக்திக்கு டீ கூட ஒழுங்கா போட வராதே!"

"அட... ஆமாங்க! இனி லீவு நாள்ல அவளுக்கு சமைக்க சொல்லித் தர்றேன்."

"ஐயோ... வேணாம்!"

அலறினார்.

"ஏங்க?"



"உன் பொண்ணு தலையில நீயே மண் அள்ளிப் போடலாமா?"

சற்று நேரம் கழித்தே அவளுக்கு அதன் அர்த்தம் புரிய, முகம் சிவந்து கத்த ஆரம்பிக்கும் முன் மடிக்கணினி பையைத் தோளில் மாட்டிக்கொண்டு வாசலுக்கு சென்றுவிட்டார்.

"அதுக்கு நான் வேற ஏற்பாடு பண்ணிக்கறேன். வரட்டுமா கல்யாணி..." என்றபடி காற்றில் முத்தத்தை அவளை நோக்கி பறக்க வைத்துவிட்டு சிரித்தபடி கிளம்பினார்.

கோபம் மறந்து, மெல்ல புன்னகைத்தாள் மனைவி– சிறு நாணத்துடன்!

★★★

**த**ம்புச்செட்டித் தெருவில் இருந்த அந்த மூன்று மாடி வீட்டின் முன் ஆரஞ்சு நிற ஸ்கூட்டியை நிறுத்தினாள் சக்தி.

குறுகலான அந்தத் தெருவில் சச்சினும், சேவாக்குமாய் மாறி இருந்தனர் சிறுவர்கள். மட்டையில் அடித்த பந்து அவள் வண்டியில் பட்டு எம்ப... சக்தி அதை லாவகமாக 'கேட்ச்' பிடித்தாள்.

போஷாக்கான ஒரு சிறுவன், மட்டையுடன் அவளருகே ஓடி வந்தான்.

"ஸாரிக்கா... தெரியாமப் பட்டிருச்சு!"

"பரவாயில்ல. நான் வண்டியை நிறுத்தறதுக்குள்ள பந்தை அடிச்சிட்ட... உன் மேல தப்பில்லே."

"நன்றிக்கா. வண்டியை அப்படி நிறுத்தினீங்கன்னா..."

"என் வண்டிக்குத்தான் நல்லது."

அவன் கன்னத்தைத் தட்டி– பந்தை கொடுத்துவிட்டு– இன்னும் சற்றுத் தள்ளி வண்டியை நிறுத்திவிட்டு அந்த வீட்டினுள் நுழைந்தாள்.

ஒரே குழந்தைகளின் சப்தம். ஞாயிறல்லவா? களேபரமாய் இருந்தது.

சற்றே பழங்காலத்திய தூண்கள் தாங்கிய விசாலமான முற்றம்.

சுற்றிலும் அறைகள். நண்டும் சிண்டுமாய் பிள்ளைகள் ஓடியாடி விளையாடிக்கொண்டிருக்க, முப்பது வயதைத் தொடங்கப்போகும் பெண்மணி- தம்ளரில் என்னவோ ஆற்றியபடி குழந்தையின் பின்னே ஓடிக்கொண்டிருக்க-

"அக்கா... மட்டனை குழம்பு பண்ணலாமா, 'கிரேவி' பண்ணலாமா?" என்றொரு பெண்ணின் குரல் ஏதோ ஒரு அறையில் இருந்து ஒலிக்க...

"அம்மாடி ஜனனி... கொஞ்சம் வெந்நீரும், 'பிரஷர்' மாத்திரையும் எடுத்துட்டு வா!" என்ற தாத்தாவின் தவிப்பான குரல் எதிர் அறையில் இருந்து வர,

விதவிதமான குரல்களும், மனிதர்களும் காச்மூச்சென்ற சப்தமும் சக்தியை ரசித்தபடி நிற்க வைத்தன.

அந்த சூழல் மட்டுமல்ல... அந்த வீடே அவளுக்கு ரொம்பப் பிடிக்கும்.

வழு வழுவென்று, முகம் பார்க்க மின்னுகிற அளவுக்கு தரையும், பிள்ளைக் கரம் படாத அழுக்கற்ற திரைச்சீலைகளும், அழகாக புத்தகம் அடுக்கப்பட்டு அமர்ந்திருக்கும் 'டீப்பாயும்', ஒரு வாரத்துக்கு... இன்னைக்கு இதுதான் என்று கால அட்டவணை போட்டு சமைக்கப்படும் ஒரே மாதிரியான சமையலும், தொலைக்காட்சியைத் தவிர மனிதர்கள் பேசாத வீடுமாய்... தன் வீட்டைப் போல் இருக்கும் பெரும்பாலான, அமைதியான வீடுகளை அவளுக்குப் பிடிக்கவில்லை.

இதோ... இந்த வீடு!

செந்நிற பூச்சுடன் சிமெண்டு தரை. முற்றம், இரட்டைக் கதவு அறைகள், கம்பி ஜன்னல்கள் குருவிக்கூடு, சுவரில் பிள்ளைகளின் கிறுக்கல்கள், தடால் புடாலென பாத்திரம் உருளும் சப்தம், மசாலாவும்... கறியும் பரப்புகிற மணம், வீடெங்கும் மனிதத் தலைகள்.

'இந்தக் குழந்தைகளுக்குத்தான் எத்தனை பெரியம்மா, பெரியப்பா, சித்தி, சித்தப்பா, மாமா, அத்தை, தம்பி, தங்கை...'

"அட சக்தி... எப்பம்மா வந்தே?"



## விதிவிலக்கு



★'டைம்' பத்திரிகையின் இண்டலுக்கு ஆளாகாத அன்றைய தலைவர்களே இல்லை என்று சொல்லலாம். விதிவிலக்கு மகாத்மா காந்தி மட்டும்தான்!

★'மாண்டி கிறிஸ்டோ' என்ற புகழ்பெற்ற நவீனத்தை இயற்றிய 'டூமாஸ்' என்ற பிரெஞ்சு எழுத்தாளர், 1,200 நூல்கள் எழுதி உள்ளார்.

–புதுகை சிவா

## நாட்டு மரம்



★பிரேசில் என்பது நாட்டின் பெயர் மட்டுமல்ல... அங்குள்ள ஒரு மரத்தின் பெயரும்கூட!

★விஞ்ஞான ஆய்வுக்கூடங்களில் வெளிர் மஞ்சள் நிறம், அபாயத்தைக் குறிக்கும்.

★ஐஸ்லாந்தில் நாய் வளர்ப்பது சட்டப்படி குற்றமாகும்.

–பச்சமுத்து, கிருஷ்ணகிரி.

கிருத்திகாவின் அத்தை பனிமலர் அவளருகே சிரித்தபடி வந்தாள். அவள் மேல் மசாலா வாசம்.

சமையலறையில் இருந்து வருகிறாள் போலும்.

"இப்பதான் ஆன்ட்டி! கிருத்திகா இல்லே?"

"இங்கதானே இருந்தா...!"

சொல்லி முடிக்கும் முன்,

"ஹாய் சக்தி..." உற்சாகமாய் அழைத்தபடி ஒரு அறையில் இருந்து வெளிப்பட்டாள் அவள்.

சக்தியுடன் கல்லூரியில் ஒன்றாய் படித்தவள்.

"எப்ப வந்தே... வா... வா!"

"பேசிட்டிரும்மா. சாப்பிட ஏதாவது கொண்டு வர்றேன்."

"டிபன் சாப்பிட்டாச்சு. மதிய உணவும் இங்கேதான்... அவரசமில்லே!"

"சரிம்மா."

சிரிப்புடன் நகர்ந்தாள் பனிமலர்.

"வா... மாடிக்கு போகலாம்."

கிருத்திகா கைப்பற்றி இழுத்தாள்.

"இல்லே கிருத்தி... இங்கேயே உட்காரலாமே...?"

"எங்கே... இந்த சந்தைக் கடையிலேயா? முதல்ல வா!"

மாடியிலுள்ள தன் அறைக்கு அவளை இழுத்துச் சென்றாள் கிருத்திகா.

## 3

கிருத்திகா பேசுவது இவள் காதில் விழுந்தாலும், பாதி கவனம் கீழே குழந்தைகளின் இரைச்சல் மீதே இருந்தன.

'குழந்தைப் பெற்றால் ஆறேழாவது பெத்துக்கணும். வீடு நிறைய விளையாட்டுப் பொருட்கள் இறைந்து கிடக்கணும். ஒன்றுடன் ஒன்று அடித்துக் கத்தி, களேபரம் பண்ணி, பதற்றத்தோடு

வேலையும், கையுமாய் சமையலறையில் இருந்து ஓடிவந்து, சமாதானப்படுத்தி...'

"நீயே சொல்லு சக்தி... இப்ப நான் என்னப் பண்ணட்டும்?"

"நீ என்ன நினைக்கறியோ அதையே..."

"ஏய்... உன்கிட்ட யோசனை கேட்கத்தானே கூப்பிட்டேன்? நீ என்னடான்னா ஒரே வார்த்தையில முடிச்சிட்டே?"

கிருத்திகாவின் பேச்சில் சோர்வு இருந்தது.

"இல்லே கிருத்தி... தனிப்பட்ட என்னோட கருத்துன்னு கேட்டா, உன்னோட வீட்டைப் பொருத்தவரை உன் காதலை ஏத்துக்கவே மாட்டாங்க. ரொம்ப ஆச்சாரமான குடும்பம் உன்னோடது. சொந்தம் விட்டுப் போகக்கூடாதுன்னு, உறவுக்குள்ளேயே கல்யாணம் பண்றவங்க. உன் ஈஸ்வர் நல்ல தேர்வுதான்! ஆனா, சாதி, மொழி எல்லாமே வேற. அவரோட வீட்லேயும், விஷயம் தெரிஞ்சு பயங்கர எதிர்ப்புன்னு சொல்றே. எல்லாரையும் உதறி எறிஞ்சு கல்யாணம் பண்ணிக்கப் போறோம்னு சொல்றது புத்திசாலித்தனமா தெரியலே...!"

"வேற வழி சக்தி? ஈஸ்வரைப் பிரியச் சொல்றியா? அதைவிட சாகச் சொல்லு...!"

"ஏய்...!"

"பின்னே என்ன? ஜென்மம் முடியுமட்டும் வலியோட வேற வாழ்க்கை வாழ முடியாதுடி! நான் சம்பாதிக்கறேன். ஈஸ்வர் சம்பாதிக்கறார். மாசம் ஒரு லட்சம். வாழ்க்கை நடத்த இது போதாதா?"

"அப்ப... இந்த உறவுகளெல்லாம் வேணாமா? இவ்ளோ பெரிய குடும்பத்தைப் பிரிஞ்சி எப்படி உன்னால...?"

"அச்சோ... குடும்பமா இது? கல்யாண வீட்டுக்கு சமைக்கிற மாதிரி வேளா வேளைக்கு இவ்ளோ பேருக்கு வடிச்சுக் கொட்டிட்டிருக்க என்னால ஆகாது. நிம்மதியா தூங்க முடியுதா? இந்த சத்தத்துக்கு காதுல பஞ்சை வச்சிட்டுத்தான் படுக்கறேன். ஒரு குழந்தைக்கு மேலே நான் பெத்துக்கவே மாட்டேன்."

சக்தி அவள் பேச்சுக்கு பதில் கூறாமல் மவுனமாய்



சிரித்தாள்.

"சரி... உன் கல்யாணம் எப்ப?"

"பார்த்துட்டிருக்காங்க."

"உங்க அம்மாகூட அன்னைக்கு என்கிட்ட சொல்லி வருத்தப்பட்டாங்க. கூட்டுக் குடும்பமா இருக்கிற வீட்லதான் வாழ்க்கைப்படுவேன்னு நிபந்தனை போடறியாம். பைத்தியமா பிடிச்சிருக்கு உனக்கு?"

"விடு... இது இக்கரைக்கு அக்கரைப் பச்சை" என்றாள் அழுத்தமாக.

★★★

**வ**றட்டு கவுரமாய், மழை மேகம் விலகாமல் இருந்தது.

குளித்துவிட்டு அறைக்கு வந்த தருண், துண்டால் உடம்பை துடைத்தபடி ஜன்னல் அருகே வந்தான்.

சாம்பல் நிறத்தில் இருந்த வானமும், சில்லிட்ட காற்றும் சற்றே கவலை அளித்தன. 'மழை நீரில் முங்கி எழும் 'பைக்', மக்கர் பண்ணி, செலவு வைத்துவிடுமே!'

கடலைப் பருப்பும், உருளைக்கிழங்கும் கலந்த சாம்பாரின் தாளிக்கும் மணம் வீட்டை நிரப்பியது.

அந்த வாசனைக்கு உடனே சாப்பிட வேண்டும்போல் தோன்றியது.

ஜன்னல் கம்பியில் கட்டி நிறுத்தி இருந்த கண்ணாடியில் முகம் பார்த்தான்.

திருத்தமான முகம். நடிகர் மோகனின் தம்பி என்றால் மறுக்காமல் நம்பிவிடுவார்கள்.

கண்களும், சிரிப்பும் அத்தனை வசீகரம். சிலும்பி நின்ற தலைமுடி. அடர்த்தியான மீசை, குவிந்த உதடு.

எத்தனையோ பெண்கள் அவனிடம் காதலைச் சொல்லி இருக்கிறார்கள். மனம்கொள்ள ஆசையும், ஏக்கமும் அவனுள் **இருந்தாலும், வீட்டு சூழ்நிலை ஏற்றுக்கொள்ள விடாமல் தடுத்தது.**

சதா எதைப் பற்றியாவது குறை சொல்லி, தொண தொணத்துக்

கொண்டிருக்கும் அம்மா மீனாட்சி. அரசுப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்த அப்பா ஏழுமலை, பணிநீக்கம் செய்யப்பட்டு வீட்டுக்கு நிரந்தரமாக அனுப்பி வைக்கப்பட்ட ஜீவன். நல்லாசிரியர் விருதுகூட வேண்டாம், 'பொல்லாத ஆசிரியர்' என்றல்லவா பெயர் வாங்கி இருந்தார்?

குடித்துவிட்டு பள்ளிக்கூடத்துக்குச் செல்வதும், சக ஆசிரியைகளிடம் தேவையில்லாமல் வழிவதும், மனைவி மேல் உள்ள கோபத்தை எல்லாம் வகுப்பறையில் பிள்ளைகளிடம் பிரம்பால் வெளிப்படுத்துவதுமாய் ஏகப்பட்ட குளறுபடிகள்.

அவரை எச்சரித்து ஒட்டுமொத்தமாய் அனுப்பி வைக்க– அந்த அவமானமும், வேதனையும் குடிப்பழக்கத்தை அதிகப்படுத்தவே செய்தன. ஏதோ கிடைத்த வேலைகளைச் செய்து சம்பாதித்தாலும், குடிப்பதற்குத்தான் அதிகமாய் செலவு செய்கிறார்.

ஐந்து பெண்களுடன் பிறந்த ஒரே ஆண் பிள்ளை தருண். அப்பாவின் விருப்ப ஓய்வு பணம், அம்மாவின் சில நகைகள், தருணின் சம்பாத்தியம் இம்மூன்றும் சேர்ந்து இரண்டு அக்காள்களையும், ஒரு தங்கையையும் கரையேற்றி வைத்தன. இன்னும் இரண்டு தங்கைகள் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு திருமணம் செய்து வைத்த பின்பே தன் திருமணம் என்பதில் பிடிவாதமாய் இருக்கிறான். வாலிபம் மெழுகாய் கரைந்துகொண்டிருக்கும் முப்பத்தி மூன்று வயது இப்போது.

ஒரு பெரிய துணிக்கடையில் வியாபார ஆலோசகர் மற்றும் மேற்பார்வையாளராக பணிபுகிறான். மாதம் இருபத்தி இரண்டாயிரம் சம்பளம்.

அவன் நல்லவன், குடும்பத்தின் மீது பாசம் கொண்ட பொறுப்பான பிள்ளை.

"தருண்..."

அழைத்தபடி உள்ளே நுழைந்தாள் அம்மா.

"என்னம்மா?"

"நேரமாயிடுச்சே, சாப்பிட வா!"

"ஆச்சும்மா. வந்துட்டேன். என்னோட மழை 'கோட்'டு எங்கே? ராகினியை எடுத்து வைக்கச் சொல்லு!"



"சரிப்பா. உன்னோட சாப்பாட்டு 'கேரியர்' எங்கே? சாப்பாடு எடுத்து வைக்கணும்."

"அட... ஸாரிம்மா... கடையிலேயே வச்சிட்டு வந்துட்டேன். வேற சாப்பாட்டு பாத்திரத்துல வச்சிடு."

"சரிப்பா. ரெண்டையும் மறக்காம எடுத்துட்டு வந்துடு!"

அடுத்த ஐந்தாவது நிமிடம், உளுத்துப் போயிருந்த பழைய மேசை முன் வந்தமர்ந்த தருணின் அருகே தட்டை வைத்து குட்டி நிலவாய் நான்கு இட்லிகளைப் பரப்பி– சாம்பாரை ஊற்றினாள் மீனாட்சி.

"அண்ணே... இதோ மழை 'கோட்...'"

அவன் அமர்ந்திருந்த இடத்தில் மற்றொரு நாற்காலி மேல் போட்ட ராகினி, பளிச்சிட்ட அழகுடன் இருந்தாள்.

"ரேகா எங்கேம்மா? காலையிலே இருந்தே கண்ணுல படல?"

"கோவிலுக்குப் போயிருக்காப்பா."

"இன்னைக்கென்ன... புதன்கிழமையிலகூட கோவில்?"

"தினமும் போறாப்பா. அங்காளம்மன் கோவில்ல, அடிப்பிரதட்சணம் பண்றா. வயசாடுச்சுல்லியா... மனசுல என்ன ஆசையோ?"

"........."

"அந்த ஆசை உனக்கு வராதா தருண்?"

"ஆரம்பிச்சிட்டியா... சாப்பிட விடும்மா!"

"கொஞ்சமாவது நான் சொல்றதைப் புரிஞ்சுக்கப்பா. இந்த ரெண்டு பேரையும் கரையேத்திட்டு நீ கல்யாணம் பண்ணிக்கணும்னா ரொம்ப வயசாகிடும். நல்ல இடமாப் பார்த்து பண்ணிக்க. அந்த நகை நட்டை வச்சு இவங்க ரெண்டு பேரையும் கல்யாணம் பண்ணி கொடுத்துடலாம்.

உனக்கு நிறைய ஜாதகம் வருதுப்பா. எல்லாருமே சம்பாதிக்கிற பொண்ணுங்க. வசதிக்கும் குறைச்சலில்லே. நான் சொல்றதை மட்டும் கேட்டா..."

"போதும்மா... நேரமாயிடுச்சு!"

ரெண்டே இட்லி சாப்பிட்டுவிட்டு– கைகழுவ நகர்ந்த பிள்ளையைப் பார்த்து முகம் சுளித்தாள்.

## 4

சின்ன வெங்காயத்தை உரித்து, சிறிதாக நறுக்கி சப்பாத்தி மாவில் போட்டாள் கல்யாணி. அடுத்து சாம்பார் பொடி, மிளகுப்பொடி, கொத்தமல்லி, வெந்தயக்கீரை என்று போட்டு பிசைய, முகம் மாறினாள் சக்தி.

"என்னம்மா பண்ணப் போறே... வடையா?"

"சப்பாத்தி மாவுல யாராச்சும் வடை சுடுவாங்களா? சப்பாத்திதான்."

"அதுக்கேன் கண்டதையும் போட்டு பிசையறே?"

"இதெல்லாம் கண்டதா? சாப்பிட்டு பார்த்துட்டு அப்புறம் கிண்டல் பண்ணு."

"சாப்பிடணுமா?"

பயந்துப் போய் வாயைப் பிளந்தாள்.

"ரொம்ப அலட்டிக்காதே! உங்க அப்பாவுக்கும், உனக்கும் என்ன கிண்டல் பண்ணலேன்னா தூக்கமே வராதே! ஒழுங்கா லீவு நாள்ல சினிமா, தோழிகள் வீடுன்னு அலையாம அம்மாக்கூட இருந்து சமையல் கத்துக்க."

"இது ரொம்ப அதிகம்மா!"

"எது... சமையல் கத்துக்கறதா?"

"உன்கிட்ட கத்துக்கணும்னு சொல்றது."

"திமிருடி! போற எடத்துல சமைக்க சொல்ல மாட்டாங்களா? எவ்வளவுதான் படிச்சாலும் பொண்டாட்டி தன் கையால புருஷனுக்கு சமைச்சுப் போடறதுதானே அழகு? பிடிச்சதை எல்லாம் சமைச்சுப் போட்டா... புருஷன் உன் கைக்குள்ளே!"

"பொய்...!"

"..........?!"

"அப்பா இப்பவும் உன் கைக்குள்ளேதான் இருக்கார். சமைச்சுப் போட்டா கவுத்திடே அவரை?"



"அசிங்கமாப் பேசாதடி!"

"என் செல்ல அம்மாக்கிட்டத்தானே பேசறேன்? சமைக்கறதை பத்தி விடும்மா. நான் போற எடத்துல ஏகப்பட்ட பெண்கள் இருப்பாங்க. சேர்ந்து சமைக்கப் போறோம். அப்ப தன்னால தெரிஞ்சுக்கப் போறேன்."

அம்மாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, கன்னத்தில் முத்தமிட்டாள் சக்தி.

கல்யாணி தன் மகளைக் கவலையுடன் ஏறிட்டாள்.

"சக்தி..."

"சொல்லு செல்லம்."

"நீ ஏம்மா நாங்க சொல்றதைக் கொஞ்சமும் யோசிச்சுப் பார்க்க மாட்டேங்கறே? விடாப்பிடியா கூட்டுக் குடும்பத்துலதான் வாழ்க்கைப் படுவேன்ங்கறே? நீ ஆசைப்படறதுல தப்பில்ல... நியாயமான விஷயம்தான். ஆனா, அதெல்லாம் அந்தக் காலத்துக்குத்தான் சரி. இப்ப சரிப்பட்டு வராது. அப்ப... எல்லாரும் பெரியவங்க பேச்சை தட்டமாட்டாங்க. அவங்க எடுக்கறதுதான் முடிவு.

இப்ப அப்படி இல்லம்மா! எல்லாரும் படிச்சு– வேலைக்குப் போய் கைநிறைய சம்பாதிக்கும்போது, மொத்தமா சேர்ந்து குடும்பம் நடத்தறதுல 'ஈகோ' பிரச்சினையும், தலை தூக்கிடும். பொறுப்புகள் அதிகமாயிடும். நமக்கே நமக்குன்னு இருக்கிற சின்னச் சின்ன ஆசைகளைக்கூட நிறைவேத்திக்க முடியாம சூழ்நிலைகள் தடுக்கும். மனுஷங்க குறுக்கே நிப்பாங்க. சுதந்திரம் பறிபோகும். யோசிம்மா!"

"நீ சொல்றதெல்லாம் சரியா இருக்கலாம்மா! ஒண்ணு யோசிச்சுப் பாரேன். ஒத்தை ரோஜாச் செடி, ஒத்தை தென்னை மரம். ஒரேயொரு வாழை மரம்னு பார்க்கறப்ப... ரசிக்கத் தோணுதாம்மா?

இதெல்லாம் ஒரே எடத்துல இருக்கறப்ப, அதை தோட்டம்னு சொல்றோம் இல்லையா? கூடவே தக்காளி, வெண்டை, கத்தரி, கீரைன்னு சேர்றப்ப எவ்வளவு நல்லா இருக்கும்.

மனசுல கனம் சேர்றப்ப, அதுங்க பக்கத்துல போய் கொஞ்சம் நின்னுப் பாரு. பூ விட்டு சின்னதாய் காய் கண்ணுக்கு தெரியும்போது, குழந்தைங்க மாதிரி மனசுவிட்டு சிரிக்கத் தோணாது? அதே மாதிரிதாம்மா கூட்டுக் குடும்பமும்.

நான் உனக்கு ஒரே பொண்ணு. கூட ஆள் இல்லாம– 'ஷேர்' பண்ணிக்க துணை இல்லாம தனியா வளர்றது கொடுமைம்மா. அன்பான பெற்றோர் எனக்கு கிடைச்சி இருக்கலாம். ஆனாலும், எந்த அளவுக்கு நெருக்கமா நான் பழகிட முடியும்? வழியே இல்லாமல் ஒரடி விலகி நிற்க வேண்டிய கட்டாயம்.

இந்தத் தனிமை எல்லாம் நம்ம வீட்டோட போகட்டும்மா! நான் போற எடம் கூட்டுக் குடும்பமா இல்லாமப் போனாலும், கண்டிப்பா அவரும் ஒத்தப் பிள்ளையா இருக்கவே கூடாது. தம்பி– தங்கச்சிங்க, அக்கா– அண்ணன்னு வீடு நிறைய உறவுகள் இருக்கணும்மா!"

மகள் பேசுவதைக் கேட்டு, நீண்ட பெருமூச்சு விட்டாள் கல்யாணி.

"எனக்கும் நாலஞ்சு பெத்துக்கணும்னுதான் ஆசை. கடவுள் தரலையே! கர்ப்பப்பையை அகற்றி ஆகணுங்கற கட்டாயத்துக்கு கொண்டுபோய் விட்டுட்டார். உடம்பு முடியாமப் போச்சு."

"புரியுது! இப்ப நான் பட்ட கஷ்டம் என் குழந்தைங்க படக்கூடாது. அவங்களுக்கு எல்லா உறவுகளும் வேணும். அப்பாவும், நீயும் காதல் திருமணம் பண்ணிக்கிட்டதால தாத்தா, பாட்டி, அத்தை, மாமான்னு இருக்கிற உறவுகள் எல்லாம்கூட எனக்கு கிடைக்காமப் போயிடுச்சு. நீ ஏம்மா அவங்களைச் சந்திச்சு ஒண்ணு சேர முயற்சி செய்யலை?"

"ப்ச்... அதெல்லாம் முடிஞ்சு போன கதை சக்தி! எங்க ரெண்டு பக்கமும் சாதி வெறி பிடிச்சவங்க அதிகம். குழந்தைப் பிறந்தா மனசு மாறிடுவாங்கன்னு நினைச்சோம். ஆனா, கல்யாணமான உடனேயே ரெண்டு பேர் வீட்லேயும் தலை முழுகி– காரியமும் பண்ணிட்டாங்க. நீ பிறந்த பிறகும், யாரும் வந்து பார்க்கலே. ஆனா, அந்தக் குறையே தெரியாம பார்த்துக்கிட்டாரு உங்க

அப்பா."

"ஆமாம்மா! அப்பா மாதிரி ஒரு அன்பானவரைப் பார்க்கறது கஷ்டம்மா. எனக்கும் அப்பா மாதிரியே குணமுள்ள மனுஷன்தான் துணையா வரணும். இன்னொரு வேண்டுகோள்: ரொம்ப வசதியான வீடா பார்க்காதேம்மா! குடும்பத்தைத் தாங்கற கடமையும், பொறுப்பும் இருக்கிற ஆம்பளைங்கதான் பொண்டாட்டிய பூப்போல தாங்குவாங்களாம்."

"யார் சொன்னது?"

"நான்தான்!"

"என்னடிப் பொண்ணு நீ?"

கல்யாணி மாவைப் பிசைந்த கையென்றும் பாராமல் தன் தலையில் அடித்துக்கொண்டாள்.

★★★

லுங்கிக்கு மாறிய தருண், சட்டை மற்றும் 'பேண்ட்'டை சுவரில் இருந்த 'ஹேங்கர்' மீது மாட்டிவிட்டு, நாற்காலியில் வந்து அமர்ந்தான்.

ஏழுமலை லுங்கி அவிழ்ந்து கால்சட்டை தெரிவதுகூட உறைக்காமல் மூலையில் தரையில் படுத்துக் கிடந்தார். குறட்டை சப்தத்தோடு 'சரக்கின்' நாற்றமும் அறையை வலம் வந்தது.

'ரிமோட்'டை எடுத்து செய்தி அலைவரிசையில் இருந்து பாட்டுக்கு மாற்றினான்.

ரேகா முகம் முழுக்க எதையோ அப்பிக்கொண்டு கண்ணாடி முன் நின்று விரல்களால் பதவிசாய் தேய்த்துக்கொண்டிருந்தாள்.

"ரேகா... அம்மாகிட்டப் போய் டீ போடச் சொல்லு!"

"ராகினிய அனுப்புண்ணா... 'பேஷியல்' பண்ணிட்டிருக்கேன்."

"கண்டதையும் போட்டு முகத்தைக் கெடுத்துக்காதே!"

"இது 'கெமிக்கல்' இல்லேண்ணா... பழங்களோட கூழ். வீட்டுல மீந்த பப்பாளியும், வாழைப்பழமும்தான்."

"அவளை விடு. தோசை மாவு கிடைச்சாக்கூட முகத்துல



அப்பிக்கிற ரகம். நேரமாயிடுச்சே தருண்! ஒரேயடியா சாப்பாடு சாப்பிட்டுக்கோ. இப்ப டீ குடிச்சிட்டு எப்ப சாப்பிடுவே?"

'கிரைண்டரில்' மாவை அள்ளிய கையோடு, இடுப்பில் தூக்கிச் செருகிய சேலையுடன் மகனிடம் வந்தாள் மீனாட்சி.

"நிறைய வேலை. பேசிப் பேசி தலையே வலிக்குது. சாப்பாடு அப்புறம் பார்த்துக்கறேன். இப்ப டீ வேணும்."

"கொஞ்சம் பொறு... வந்திடறேன்."

அம்மா அகன்றாள்.

ராகினி கையில் ஒரு புத்தகத்துடன் பக்கத்து அறையில் அமர்ந்திருக்க, பொறுப்பற்ற அந்த சூழ்நிலை அசுவாரசியமாய் தெரிந்தது.

அம்மாவுக்கு ஒத்தாசை செய்யாமல், இருவரும் சுயநலமாய் இருந்தது பதற்றமாக்கியது.

கடிந்துப் பேசி தலைவலியை அதிகப்படுத்திக்கொள்ள மனமின்றி தொலைக்காட்சியில் பார்வையைப் பதித்தான்.

'வல்லவா... உன்னை.

வெல்லவா... என்னை

அள்ளவா...?'

சிம்புவும், நயன்தாராவும் நெருங்கி நெருங்கி ஆடிப் பாட...

தருண் மனம் சலனப்பட்டது.

உடம்பை யாரோ 'கிச்சு கிச்சு' பண்ணுவது போல் இருந்தது.

## 5

ஞாயிறு!

விடுமுறை நாளானாலும் வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. கல்யாணப் பேச்சை எடுத்து நாள் முழுக்க அம்மா வறுத்தெடுப்பாள்.

உடை மாற்றிக்கொண்டு புறப்பட்ட மகனை, வியப்பால் கேட்டாள் மீனாட்சி.

"எங்கேப்பா கிளம்பறே?"

"விமல் வீட்டுக்கு... ஏன் கேக்கறே?"

"உன்கிட்ட நிறைய பேசணும்ப்பா..."

"நான் இரவுதாம்மா வருவேன். வர்றேன்!"

'பைக்'கை உதைத்துப் புறப்பட்டான்.

'என்ன இந்த புள்ள... பிடி குடுக்க மாட்டேங்குதே!'

சின்ன எரிச்சலுடன் கடகடத்துச் சென்ற 'பைக்'கையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

★★★

விமல், தருணின் கல்லூரி நண்பன். அவனது வீடு, பெரியார் நகரில் இருந்தது. இரண்டு மாடிகளை வாடகைக்கு விட்டுவிட்டு தரைத் தளத்தில் இருந்தான். ஒரு தனியார் கம்பெனியில் நல்ல வேலை. நாற்பதாயிரம் சம்பளம். இரண்டு குழந்தைகள், ஆசிரியை மனைவி என அருமையான வாழ்க்கை.

தருணுக்கு டீ போட்டுத் தந்த விமல், "மதியம் நான்தான் சமைக்கப் போறேன். 'சிக்கன்' இருக்கு. என்ன வேணும்? பிரியாணியா, கோழிக் குழம்பா?"

"ஓ... சமைக்கிற அளவுக்கு கைதேர்ந்த ஆளாயிட்டியா?"

"ம்..."

"எனக்கு பிரியாணி பிடிக்கும்."

"பொண்டாட்டி ஊர்ல இல்லாத நேரம் இப்படி சமைக்க கத்துக்கிட்டா கஷ்டப்பட வேண்டாம் பாரு. பிருந்தாவும், குழந்தைகளும் ஒரு கல்யாணத்துக்காக காரைக்குடி போயிருக்காங்க. நாளைக்கு வந்திடுவாங்க. அவ நல்லா சமைப்பா. எனக்கும் சொல்லிக் கொடுத்தா."

"புருஷன் சமைக்கணும்னு நினைக்கறது தப்பில்லையா?"

"என்னடா தப்பு? அவங்க நம்மளுக்கு சமைச்சுப் போடலே? நமக்கு இணையா படிச்சு, வேலைக்குப் போய் சம்பாதிக்கற பொண்ணுங்க... நீங்களும் சமைச்சுதான் ஆகணும், துவைச்சித்தான் ஆகணும்னு யாரும் கொடி பிடிக்கறதில்லே! ஆனா, வலியப் போய் இதையெல்லாம் செஞ்சு பாரு... அதுலதான் கொட்டிக் கிடக்கு... தாம்பத்திய வாழ்க்கைக்கான இனிமையான சாராம்சமெல்லாம்?



புருஷனை தலை மேல வச்சுக்கிட்டு ஆடுவாங்க.

ஒண்ணு தெரியுமா? ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் எங்க வீட்ல என் சமையல்தான். பொண்டாட்டிய உட்கார வச்சு ஆக்கிப் போட்டு பரிமாறிப் பாரு! தாம்பத்தியத்துல இன்பம் எதுன்னு அன்னைக்குப் புரியும்."

"ரொம்ப மாறிட்டேடா!"

"நல்லவனாத்தானே? வாழ்க்கையை வாழ்ந்து பார். ஆமாம்... உன் கல்யாண விஷயம் என்ன ஆச்சு?"

"பச்... உனக்கென்னடா? நீ ஒரே பையன். கடமை, பொறுப்புன்னு எந்த கஷ்டமும் இல்லை. ஆனா, என் சூழ்நிலை?"

"சூழ்நிலையைக் காரணம் காட்டாதே! சரியான வயசுல நீ கல்யாணம் பண்ணி இருந்தா இந்நேரம் எட்டு வயசுல குழந்தை இருந்திருக்கும். உன் தங்கச்சிங்க கல்யாண விஷயம் சரி... அதுக்காக வயசுக்கு ஏன்டா துரோகம் பண்றே? நீ காலதாமதமா கல்யாணம் பண்ணி, உன்னோட குழந்தை வளர்ந்து கல்யாணத்துக்கு நிக்கும்போது, அதுக்காக உழைக்க உனக்கு உடம்புல தெம்பு வேணுமே தருண்? கொஞ்சம் சுயநலமாயும் யோசிக்கணும்டா! நீ சரின்னு சொல்லு... நான் உனக்கு பொண்ணு பார்க்கிறேன். உங்க அம்மாக்கூடவா உன்னைப் பத்தி யோசிக்கலே?"

விமலின் பேச்சுக்கு அவசரமாய் மறுத்தான் தருண்.

"சேச்சே... அம்மாவை தப்பு சொல்லாதேடா! இப்பக்கூட என் கல்யாணப் பேச்சை எடுக்கப் போறாங்களோன்னு பயந்துதான் இங்கே வந்துட்டேன்."

"அப்புறம் என்னடா உன் பிரச்சினை?"

"ரெண்டு தங்கச்சிங்களை வச்சுக்கிட்டு எப்படிடா கல்யாணம் பண்ணிக்கறது? இந்த காலத்துல பொண்ணை பெத்தவங்களே... தான் பொண்ணு வாழ்க்கைப்படுற எடத்துல மாமியார், மாமனார்கூட உயிரோட இருக்கக் கூடாதுன்னுதான் வரன் பார்க்கிறாங்க. இதுல தங்கச்சிங்களும் இருக்காங்கன்னா..."

**"நீ சொல்றதும் சரிதான். அது பெரிய விஷயமில்ல. வேலைக்குப் போற பொண்ணாப் பார்த்துதான் உனக்கு கல்யாணம் பண்ணணும்."**

"வேற வழியில்லே. அப்படித்தான் பார்த்தாகணும். ஆனா அந்தப் பொண்ணும் சம்மதிக்கணுமே! ஜவுளிக்கடையில மேற்பார்வையாளருன்னா முகம் கோணுமே. இதுக்கு அம்மா சொல்ற யோசனைதான் பதற வைக்குது!"

அப்படி என்னதான் சொல்லிட்டாங்க?"

விமல், வெங்காயத்தை அழகாய் நறுக்கியபடி கேட்டான்.

"பொய் சொல்லப் போறாங்களாம். நான் 'சாப்ட்வேர் என்ஜினீயர்'னும், கல்யாணமாகாத ஒரு தங்கச்சியும் இருக்கறதா பொண்ணு வீட்ல சொல்லப் போறாங்களாம்!"

"..........!"

"என்னடா... அமைதி ஆகிட்டே? உனக்கே அதிர்ச்சியா இருக்கில்லே?"

"இல்லடா! எனக்கென்னவோ அம்மா சொல்றதுதான் சரின்னு தோணுது."

"ஏய்... என்னடா நீயும் குண்டைத் தூக்கிப் போடறே? கல்யாணமாகிட்டா சாயம் வெளுத்துப் போகாதா?"

"வெளுக்கத்தான் செய்யும். அதையும் 'பாசிட்டிவா' மாத்தற சக்தி காதலுக்கு இருக்கு."

"காதலா? நான் யாரைக் காதலிச்சேன்?"

"இப்படியாடா இருப்பே? உன் பொண்டாட்டியதான் சொல்றேன். உருகு... திகட்ட திகட்ட பாசத்தைக் கொட்டு. தும்மல் போட்டாக்கூட... 'தலைய வலிக்குதாடா செல்லம்?'னு தலைவலி தைலத்தோட பக்கத்துல் போய் நில்லு! இப்படிப்பட்ட புருஷன் இன்னொரு பொண்ணோட நின்னாக்கூட சண்டைப் போட மாட்டா! அதுக்காக... இன்னொருப் பொண்ணோட போயிடாதே!"

"இதெல்லாம் சரிப்பட்டு வருமா?"

"வழியே இல்லன்னா சாஷ்டாங்கமா காலில்கூட விழலாம். பொண்டாட்டிதானே? தப்பே இல்லே."

"தலைய சுத்துது விமல்!"

"எல்லாத்துக்கும் மேலே... அந்தந்த வயசுக்குள்ள அனுபவிச்சிடணும்டா. சுயநலமா பொண்டாட்டிய தேர்ந்தெடுக்கறதுல தப்பே இல்லே. அவங்களும் அப்படித்தானே... பார்த்து பார்த்து தேர்வு பண்றாங்க."



"ஒண்ணும் பிரச்சினை ஆகிடாதில்லே விமல்?"

"டேய்... அவனவன் கல்யாணம் ஆனதையே மறைச்சு மறைச்சு நாலஞ்சு கல்யாணம் பண்ணிக்கறான். நீ நல்லவன்டா... உன் மனசை, வரப்போறவ நல்லாப் புரிஞ்சுப்பா. கவலையேபடாதே! உங்க அம்மாகிட்டே ஆக வேண்டியதைப் பார்க்கச் சொல்லு!"

தருண் உள்ளம் கொஞ்சம் தெளிவானது.

உண்மையிலேயே விமல் அருமையாய் சமைத்திருந்தான்.

'நாமும் இப்படி சமைக்கக் கற்றுக்கொண்டால் என்ன?'

'சூப்பர்ம்மா... எனக்காகவே சமைச்சிங்களா கண்ணா! நான்கூட இப்படி சமைச்சதில்லே. ரொம்ப சூப்பர்...' என்றபடி மடியில் போட்டு, முடியைக் கோதி, முகத்தை நோக்கி...

கற்பனையே சிலிர்த்தது.

'அவள்... என்னவள்... எப்படி இருப்பாள்?'

இதுநாள் வரை ஏற்படாத ஆர்வம், ஆசையைத் தூண்டியது.

வீட்டுக்கு வந்தபோது... அரை போதையில் இருந்த அப்பா, இவனைப் பார்த்து ஒதுங்கிப் போனார். அவர் எப்பவும் இப்படித்தான்... குடித்துவிட்டு விழுந்து கிடப்பார். யாரிடமும் பேசுவதில்லை. சமயத்தில் அவரைப் பார்க்கும்போது, பாவமாகவும் இருக்கும். கோபமாகவும் வரும்.

ரேகா, கையில் உப்புக் கடலையை வைத்துக்கொண்டு, ஒவ்வொன்றாய் வாய்க்குள் தள்ளிக்கொண்டிருந்தாள். கண்கள் ஆவலாய் தொலைக்காட்சியில் ஓடிய காதல் காட்சியில் பதிந்திருந்தன.

"காப்பி வேணுமாண்ணா...?" என்று எதிர்கொண்டு கேட்ட ராகினிக்கு இதமான புன்னகையால் விருப்பத்தைத் தெரிவித்துவிட்டு தன் அறைக்கு வந்தான்.

ராகினி முதலாம் ஆண்டு பி.பி.ஏ. படிக்கிறாள். ரேகாவுக்கு படிப்பில் நாட்டமில்லை. 'பிளஸ்-2'வோடு வீட்டில் இருந்துவிட்டாள்.

உடை மாற்றி நாற்காலியில் அமர்ந்தவனிடம் காப்பி தம்ளரை

தந்தாள் ராகினி.

"அம்மா எங்கே?"

"பெரிய அக்கா வீட்டுக்குப் போய் இருக்காங்க!"

ஏனோ, அம்மா உடனே வந்து தன் திருமண விஷயமாக பேசமாட்டார்களா என்றிருந்தது அவனுக்கு!

# 6

அடுத்தடுத்து இரண்டு நாட்கள் நகர்ந்தோடின. எப்போதும் கல்யாண விஷயம் பேசி சங்கடப்படுத்தும் மீனாட்சி, அதைத் தவிர மற்றதை எல்லாம் பேசி கடுப்பேத்தினாள்.

அன்றிரவு... மகனுக்கு பரிமாறிக்கொண்டிருந்தாள்.

"இன்னும் கொஞ்சம் ரசம் ஊத்தவா தருண்?"

"போதும்மா... இனிமேல் இரவுல எனக்கு சாப்பாடு வேண்டாம்மா!"

"ஏம்ப்பா?"

"சரியா தூக்கம் வரமாட்டேங்குது. நெஞ்சிலேயே நிக்குது. சப்பாத்தியோ, தோசையோ போட்டுக் குடுத்துடும்மா!"

"சரிப்பா..." என்றவள், நெற்றி மேலேற பெருமூச்சு விட்டாள்.

"என்னம்மா?"

"அணையை உடைச்சுட்டுப் போன வெள்ளம் அழுதால்கூட திரும்ப வராது. வயசாகுதில்லையா? அஜீரணக் கோளாறுலதான் ஆரம்பிக்குது எல்லா நோயும்."

"..........."

"அன்னைக்கு உங்க அக்கா வீட்டுக்கு போயிருந்தேன் தருண். பெரிய குழந்தைக்கு காதுகுத்து விழா வச்சிருந்தாங்களாம். தாய்மாமன் சீர் செய்யணும்."

"...........!"

"என்னப்பா அமைதியாயிட்டே?"



"ஒண்ணுமில்லேம்மா... பண்ணிடலாம். நாளன்னிக்கு வானகரத்துல ஒரு கல்யாணம் இருக்கு. போகணும். ஞாபகப்படுத்து!"

"யார் வீட்டுக் கல்யாணம்?"

"என்கூடப் படிச்சானே ராஜா? அவனோட கடைசி தம்பிக்கு!"

மீனாட்சிக்கு முகம் மாறியது.

"ராஜாவுக்கு மூணு தம்பியில்லே?"

"ஆமாம்மா."

"உனக்கு உறுத்தலா இல்லையா தருண்? ராஜாவோட குழந்தைக்கு கல்யாணம் ஆகும்போதாவது உனக்கு ஆகுமா?"

எப்படியோ... சுற்றி வளைத்து அம்மாவை தன் திருமண பேச்சை பேச வைத்த நிம்மதியை முகத்தில் காட்டாமல் கனிவாய் பார்த்தான்.

"என்னை என்னதான் பண்ணச் சொல்றே?"

"நீ சரின்னு ஒரு வார்த்தை சொன்னாப் போதும். கைளையா கையிலே நாலு வரன் இருக்கு. எல்லாமே வேலைக்குப் போறவங்க, வசதியானவங்க!"

"சரி... உன்னை இன்னும் கஷ்டப்படுத்த விரும்பலே. கல்யாணம் பண்ணிக்கறேன். ஆனா..."

"மகமாயி... கண்ணைத் திறந்திட்டே தாயி... வேளை வந்துட்டா வேண்டாம்னாலும் நிக்காது. சொல்லுப்பா..."

"வசதியான இடமெல்லாம் வேண்டாம்மா. நம்மளுக்கு ஏத்த மாதிரி பாரும்மா!"

"உனக்கு தெரியாது தருண். கொஞ்சமாவது வசதியா இருந்தாத்தான் இந்த ரெண்டு பேரையும் கரையேத்த முடியும். ஏன் தயங்கறேன்னு புரியுது. அதுக்குத்தான் நீ பார்க்கற வேலை, இந்த வீட்டு சுமை பத்தி ரெண்டு பொய் சொல்லப்போறேன்."

"தெரிஞ்சா பிரச்சினையாய் மாறிடும்மா!"

"யார்தான் பொய் சொல்லலே? சின்னப் பொய்தானே!

தன்னால சரியாப் போயிடும். அதுவும் உன்னைக் கோவிச்சுக் யாருக்கும் மனசு வராதுடா! நம்ம நிலமைய கொஞ்சம் யோசிச்சு பாரு. இதெல்லாம் பெரிய விஷயமாத் தெரியாது. காலையிலே இருந்தே உங்க அப்பா நாலஞ்சு முறை வாந்தி எடுத்துட்டார். வீடே நாறிப் போச்சு. இத்தனை புள்ளைங்களை பெத்த மனுஷனுக் கொஞ்சமாவது பொறுப்பு இருக்க வேணாமா? எல்லா கவலையு நான் மட்டுமே படணுமா? சம்பாதிக்கறதை இந்த பிள்ளைங்களுக் சேர்த்து வைப்போம்னு ஒரு பயம் இருக்கா? சில நேரம் சாப்பாட் விஷத்தை வச்சு குடுத்துடலாமான்னுகூடத் தோணுது!"

"அம்மா?!"

"பின்னே என்னப்பா? மனசு விட்டுப் போச்சு. ஒ பொம்பளையா இவருக்கு வாக்கப்பட்டு எனக்குன்னு எதுக்காகவு ஆசைப்பட்டதில்லே. சரி... இந்தாளைப் பத்தி விடு. உன் கல்யாண விஷயத்துக்கு வருவோம். நேத்துக்கூட தரகர் நாலு ஜாதக கொண்டு வந்தார். எல்லாமே வசதியான இடம். ஒரு வரன் அயனாவரத்துல இருக்கு. கல்லூரியிலே விரிவுரையாளர். ஒ பொண்ணு. சொந்தமா ரெண்டு வீடு. வயசு இருபத்து மூணு."

"விரிவுரையாளரா? வேணாம்மா..."

"ஏம்ப்பா? ஒரே பொண்ணு வேற...?"

"வேற சொல்லு!"

"இன்னொண்ணு, அடையாறு! 'ஏர்போர்ட்'ல என்னமோ வேலையில இருக்கு. அப்பாவும், அண்ணனும் மட்டும்தான் இருபத்தி ரெண்டு வயசாகுது."

"வேற?" என்றபடி கையை கழுவிக்கொண்டு எழுந்தான்.

தட்டை எடுத்து சமையலறையில் வைத்துவிட்டு, அலமாரியில் இருந்த ஒரு காகித உறையை எடுத்துக்கொண்டு தருண் பின்னே அவன் அறைக்குச் சென்றாள்.

"பெரம்பூர்ல ஒரு பொண்ணு... சக்தின்னு பேரு. 'சாப்ட்வே கம்பெனியில வேலை. வீட்டுக்கு ஒரே வாரிசு. இவ ஜாதகம்தாம்ப மத்த ஜாதகத்தைவிட உனக்கு ரொம்பப் பொருந்தி இருக்கு."



"என்ன வயசு?"

"இருபத்தி நாலு."

"வேணாம்மா! எனக்குப் பார்க்கிற பொண்ணுக்கு இருபத்தொன்பது, முப்பது வயசிருந்தா தேவலை."

"ஏன்?"

அதிர்ச்சியாய் கேட்டாள் தாய்.

"ப்ச்... இதோ... ரெண்டு மாசம் வந்தா முப்பத்தி நாலு. ஒரு மூணு, நாலு வயசு வித்தியாசம் இருந்தாத்தான், கருத்து வேறுபாடு இல்லாம இருக்கும். ரொம்பச் சின்னப் பொண்ணெல்லாம் வேணாம்மா!"

"பைத்தியமா உனக்கு? அப்ப உள்ள காலத்துல பத்து அல்லது பதினைஞ்சு வயசு பெரியவராப் பார்த்துதான் பொண்ணுக்கு கட்டி வைப்பாங்க. உனக்கென்ன... சினிமாக்காரன் மாதிரி இருக்கிறே? இந்த காலத்துப் பொண்ணுங்க ஒரு பிள்ளையைப் பெத்தாலே கிழவி மாதிரி ஆகிடுறாளுங்க. முதல்ல இந்தப் பொண்ணோட போட்டோக்களைப் பாரு!"

கையில் திணித்தாள்.

சங்கோஜத்துடன் ஒவ்வொன்றாய் பார்த்தான்.

ஒருத்தி... அதீத நாகரீகமாய், தளர்வான–மிருதுவான கேசத்துடன் புன்னகைத்தாள்.

மற்றொருத்தி உதட்டுச் சாயம் பளிச்சிட, சுடிதார் அணிந்துகொண்டு இருசக்கர வாகனத்தின் மீது ஸ்டைலாய்' சாய்ந்தபடி.

அடுத்தவள் பழுப்பு நிற 'கலரிங்' செய்யப்பட்ட கூந்தலோடு, 'காண்டாக்ட் லென்ஸ்' பார்வையில் மயக்கினாள்.

இன்னொருத்தி பளிச்சென்ற முகமும், வரைந்த கண்களும், இளம் புன்னகையைச் சிந்தியபடி தலையில் மல்லிகைப்பூவுடன், சல்வாரில் கைகளைக் கட்டிக்கொண்டு பாந்தமாய் தெரிந்தாள்.

அந்தக் கடைசி புகைப்படத்தில் இருந்து–

அவ்வளவு எளிதில் பார்வையை விலக்க முடியவில்லை!

"இந்தப் பொண்ணு பேர்தான் சக்தி. நல்லா இருக்கில்லே?"

"ம்...!"

"என்ன... ஒரே ஒரு நிபந்தனைதான். நல்ல குடும்பமா இருக்கணும். கல்யாணத்துக்குப் பிறகு வேலைக்குப் போ அனுமதிக்கணும்."

புகைப்படத்தின் பின்புறம் 'எதிர்பார்ப்பு' என்று சில விஷயங்க எழுதப்பட்டிருந்தன. அதில் இருபத்தியெட்டு வயதுக்குள் மணமக வேண்டும் என்று இருக்க... தொய்ந்து போனான் தருண்.

அவசரமாய் எழுப்ப முயன்ற ஆசைக்கோட்டை தகர்த்தான்.

"வேணாம்மா!"

"என்னப்பா நீ? எதுக்கெடுத்தாலும் வேணாம், வேணாம்னுட் எதுக்கு வேணாங்கறே?"

"மாப்பிள்ளைக்கு இருபத்தியெட்டு வயசுக்குள்ள இருந்தா போதும்னு எழுதி இருக்காங்க பாரு!"

"இதெல்லாம் ஒரு விஷயமா? அது எனக்கும் தெரியும். அதுக்கு ஒரு யோசனை வச்சிருக்கேன்."

"என்ன?"

"உனக்கு அஞ்சு வயசு குறைச்சு, வேற ஜாதகம் எழுதிட்டா போச்சு!"

"அம்மா!"

கோபமாய் அதட்டினான்.

"என்ன... விளையாடுறியாம்மா? இதெல்லாம் சாதாரண விஷயமாப் போச்சா? எதெதுல பொய் சொல்றதுன்னு ஒ விவஸ்தை இல்லே?"

மீனாட்சி தன் மகனின் தோளைப் பிடித்து, உரிமையுட அழுத்தினாள்.

"இதுவும் இப்ப சாதாரணமாப் போயிடுச்சுப்பா. ஜாதக பார்க்கறதைவிட, இந்த மாதிரி ஜாதகம் எழுதிக் கொடுத்து கா சம்பாதிக்கிற ஆளுங்க அதிகமா இருக்காங்கன்னா... எத்தனை



பேர் கல்யாண விஷயத்துல பொய் சொல்றாங்கன்னு புரிஞ்சுக்க. இந்தப் பொண்ணு நம்ம வீட்டுக்கு வந்தா... மகாலட்சுமியே வந்த மாதிரியாம். அப்பேர்ப்பட்ட ராசி! அம்மா பேச்சை கேளுப்பா. இந்த வீட்டுக்கு ஒரு விடிவு காலம் வர வேண்டாமா? சரின்னு சொல்லுப்பா!"

மனசே இல்லை என்றாலும், சக்தியின் புன்னகைக்கு பெரிய சக்தி இருக்கவே...

மெல்லத் தலையாட்டினான் தருண்.

## 7

சமோசாவைப் புதினா சட்னியில் தொட்டு லாவகமாய் சாப்பிட்ட சக்தி, எதிரில் அமர்ந்திருந்த அப்பாவைப் பார்த்தாள்.

கைலாசம் அன்றைய தினசரியை விரித்து, முகத்தை மறைத்திருந்தார்.

"என்னப்பா... அவ்ளோ தீவிரமா படிச்சிட்டிருக்கீங்க? சமையலுக்கு ஆள் வேணும்னு விளம்பரம் கொடுத்திருக்கீங்களா என்ன? வேணாம்ப்பா... சாப்பிட்டுப் பாருங்களேன். இன்னைக்குன்னுப் பார்த்து, அம்மா சமோசாவை ரொம்ப சூப்பரா செஞ்சிருக்காங்க. சூடு ஆறதுக்குள்ள சாப்பிடுங்க!"

சிரித்தார் கைலாசம்.

மேற்கில் ஆதவன் குதித்து தற்கொலை செய்துகொண்டதில் அழுதழுது கீழ் வானம் சிவந்திருந்தது.

"காலையில பேப்பர் சரியாப் படிக்கலேம்மா. அதான் இப்ப படிக்கிறேன். சரி... சரி... அந்த சமோசாவை கொடு. சாப்பிட்டு பார்க்கிறேன்..."

"..........."

ஒன்றை எடுத்து கடித்து சுவைத்து, புருவம் மேலேற ஆச்சரியப்பட்டார்.

"அட... நிஜம்தான். நல்லாதான் இருக்கு!"

"போதும்... என் காலை வாரி விட்டதெல்லாம்? எதுக்காக உங்க ரெண்டு பேரையும் சீக்கிரம் வீட்டுக்கு வரச் சொன்னேன் தெரியுமா?" என்றபடி கையில் சமோசா தட்டுடன் அவர்கள் பக்கத்தில் வந்தமர்ந்தாள் கல்யாணி.

"இதை சாப்பிடத்தானே?"

"போதும்டி உன் விளையாட்டெல்லாம்? இந்தா... இதுல பதிமூணு 'போட்டோ' இருக்கு. அதிலேயே அவங்களைப் பத்திய விபரமும் இருக்கு. எல்லாமே நீ போட்ட நிபந்தனைக்கு ஏத்த வரன்தான். பெரிய குடும்பத்துல பிறந்தவங்க. இதுல யாரைப் பிடிச்சிருக்கோ... அவங்களை கல்யாணம் பண்ணி வைக்கிறோம். பார்த்துச் சொல்லு!"

ஒரு பெரிய உறையை மகளிடம் நீட்டினாள்.

திடுதிப்பென்று அம்மா அப்படிச் சொன்னதும், மின் விசிறி வேகமாய் சுற்றியது போல் காற்று சட்டென முகத்தில் வந்து மோதியது.

'அட...' என்பதுப் போல் மனைவியைப் பார்த்தார் கைலாசம்.

எங்கிருந்தோ வந்த வெட்கம், சக்தியின் முகத்தை செம்மையாக்கியது.

"சரிம்மா" என்றவள், அந்த உறையைத் தொடாமல் சாப்பிட்டுக்கொண்டிருந்தாள்.

"பாருங்களேன்... 'போட்டோ'வைப் பார்த்துச் சொல்லச் சொன்னா... மதிக்கவே மாட்டேங்கறா?"

"ஐயோ அம்மா... நீயெல்லாம் எப்படித்தான் காதலிச்சு, கல்யாணம் பண்ணி, குழந்தையும் பெத்து குடும்பம் நடத்தறியோ புரியல? கொஞ்சமாவது என்னை வெட்கப்பட விடு! அப்புறமா, தனியா, நிதானமாப் பார்த்துட்டு நாளைக்கு சொல்றேன். சரியா?"

"சக்தி... நிஜம்தானா?"

அப்பா, அவளை குறுகுறுவெனப் பார்த்தார்.



"எதுப்பா?" என்றாள் வியப்பாய்.

"நீ வெக்கப்பட்டியா என்ன?"

"அ...ப்...பா!"

சந்தோஷமாய் சிணுங்கினாள்.

★★★

**ம**றுநாள் 'பவுர்ணமி' படப்பிடிப்பு என்பதால், கதை விவாதத்தில் ஈடுபட்டிருந்த முழு நிலவை கவனமாய் பார்த்துக்கொண்டிருந்தன விண்மீன்கள்.

கணவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்த கல்யாணி, "எதுக்குங்க உங்களைச் சீக்கிரமா வரச் சொன்னேன்? ஒரு வார்த்தையாவது கல்யாண விஷயமாப் பேசினீங்களா? அவ பாட்டுக்கு இதையும் வேண்டாம்னு சொல்லி தள்ளிப் போடப் போறா?"

"மண்டு! இதுல நான் சொல்றதுக்கு என்ன இருக்கு? நீதான் அவளோட நிபந்தனைக்கு இறங்கி வந்துட்டியே! அவ கேட்ட மாதிரி வரன்கள் வந்திருக்கு. நீ சொன்னதும், முகத்தல தெரிஞ்ச சந்தோஷத்தைப் பார்த்தியா? உன் பொண்ணு... நாளைக் காலையில இந்த வீட்டு மருமகனை அடையாளம் காட்டிடுவா... கொஞ்சம் காத்திரு!"

"கேக்க சந்தோஷமாத்தான் இருக்கு. ஆனா, நம்பிக்கைதான் வர மாட்டேங்குது."

"அப்ப என் பொண்ணை நீ சரியாப் புரிஞ்சுக்கலேன்னு அர்த்தம்."

கூடத்தில் கேட்ட பேச்சு சத்தம், மூடிய கதவை மீறி சக்தியின் காதில் விழவே செய்தது.

ஆனால், அவள் கண்களோ சுறுசுறுப்பாக வேலை செய்துகொண்டிருந்தன.

கட்டில் மேல் எல்லா புகைப்படங்களையும் பரப்பி வைத்திருந்தாள்.

அத்தனை ஆண்களுமே, ஏதோ ஒரு வகையில் வசீகரமாய்

இருந்தார்கள். அதில் ஒருவன் மட்டும் நேரில் வந்தது போல காந்தமாய் ஈர்த்தான்.

கண்களில் கனிவும், நீள மூக்கில் பொறுப்புணர்வும், உதட்டோரப் புன்னகையில், 'என்னை நேசி' என்ற அழைப்பும் இருக்க, மீண்டும் மீண்டும் அவனையே பார்த்தாள்.

பார்க்கப் பார்க்க... அவன் தனக்கு மிக நெருக்கமானவன் என்ற உணர்வே எழுந்தது. ஒருகணம் தன் கண்களை மூடி, மனதைக் கேட்டாள்.

'இவரையே 'செலக்ட்' பண்ணட்டுமா?'

உள்ளத்தில் பரவசம் வியாபிக்கவே... அதையே சம்மதமாய் எடுத்துக்கொண்டு, புகைப்படத்தை கையில் எடுத்தாள்.

பின்பக்கம் திருப்பினாள்.

பெயர் தருண்.

வயது 29, மென்பொருள் நிறுவனத்தில் குழுத் தலைவர். நாற்பதாயிரம் சம்பளம் மற்றும் குடும்ப விபரம் எல்லாம் எழுதப்பட்டிருக்க...

சக்தியின் உதட்டில் திருப்தி மலர்ந்தது.

★★★

அலுவலகம் கிளம்பும்போது, தருணின் 'போட்டோ'வை வேறொரு உறையில் போட்டு, அம்மாவின் கையில் திணித்துவிட்டு புறப்பட்டாள்.

கல்யாணி ஆர்வமாய் எடுத்துப் பார்த்தாள்.

மாப்பிள்ளைப் புகைப்படம்... அவளையும் திருப்பதிப்படுத்த– ஏனோ அவனின் பின்புலம் மனதுக்கு சஞ்சலத்தைத் தந்தது.

'இந்த வரனைவிட வசதியாய் உள்ளவைகள் அதில் இருந்தன. அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்திருக்கலாமோ?' என்ற எண்ணம் எட்டிப் பார்க்க, கைலாசம் அவளருகில் வந்து புகைப்படத்தைப் பார்த்தார்.

"குட்... நல்ல தேர்வு. இப்ப சந்தோஷமா கல்யாணி! சக்திக்கு ஏத்த கதாநாயகனைத் தேடிக் கண்டுபிடிச்சாச்சு. அடுத்து ஆகற வேலையைப் பாரு!"



"இன்னும் நிறைய வரன்கள் இருக்குதுங்க. பெரிய குடும்பமா இருந்தாலும், ரொம்ப வசதியா... அதிலே யாரையாவது தேர்ந்தெடுத்திருந்தா இன்னும் நல்லா இருக்கும்னு தோணுது."

"இதுதான்டி உன் புத்தி! எல்லாத்திலேயும் குறை கண்டுபிடிக்காதே! நம்ம பொண்ணுக்குப் பிடிச்சிருக்கணும். அதுதான் முக்கியம். அது மட்டும்தான் முக்கியம்."

'சரி'யென தலையாட்டினாள்.

"அப்புறம் ஒரு விஷயம்ங்க...!"

"என்ன?"

"தரகர் சொல்றதை எல்லாம் நம்பிட முடியாது. அவங்களுக்கு என்ன... காட்டுற இடத்தை முடிச்சிட்டு, கமிஷன் வாங்கிக்கணும். அதுக்காக பல விஷயங்களை மூடி மறைச்சிடுவாங்க.நீங்க என்ன பண்றீங்க... இந்தப் பையன் எப்படி, என்னன்னு கொஞ்சம் விசாரியுங்க..."

"கொஞ்சமென்ன... நெறயவே விசாரிக்கலாம். முதல்ல பொண்ணு, அந்த மாப்பிள்ளையை நேர்ல பார்க்கட்டும். அதுக்கப்புறம் விசாரிக்கலாம்."

"ஏங்க... நான் என்ன சொன்னாலும் நீங்களும் சரி, சக்தியும் சரி... உடனே எதையும் கேட்டுக்கறதே இல்லே!"

"நான் கேட்க மாட்டேன்னா சொன்னேன்? அப்புறம் விசாரிக்கறேன்னுதானே சொல்றேன்!"

"தள்ளிப் போடறதுக்கு இது சாதாரண விஷயமில்லே. நம்மப் பொண்ணோட கல்யாண விஷயம்."

"புரியாமலில்லே! எல்லா விஷயத்தையும் சந்தேகத்தோட பார்க்கக்கூடாது கல்யாணி! வாழ்க்கைங்கறது வாழ்வதில் இல்லை. நம் விருப்பத்தில் இருக்கிறது. சக்திக்கு பிடிச்ச வாழ்க்கையை, அது ஏறக்குறைய இருந்தாலும் அமைச்சுக் கொடுக்கறதுதான் நம்ம கடமை. அக்கம் பக்கம் மனுஷங்க நிறைய பேர் பொறாமையும், துவேஷமுமாத்தான் பழகறாங்க. ஒருத்தரைப் பத்தி விசாரிக்கப் போனா, உண்மையை மறைச்சு தப்பா பேசறதுக்குன்னு பல பேர் இருக்காங்க. ரொம்ப குழம்பாதே! யோசிக்காதே! அவங்க வந்து முதல்ல நம்மப் பொண்ணை பார்க்கட்டும்... சரியா?"

புரிந்தும் புரியாமல்- சம்மதமாய் தலையாட்டினாள் கல்யாணி.

## 8

வீட்டின் முகப்பே மீனாட்சிக்கு ரொம்பப் பிடித்துப் போனது.

'இன்னைய விலைக்கு ஒண்ணு, ஒண்ணரை கோடிக்கு தேறுமில்லே?'

மனசுக்குள் கணக்குப் போட்டு மகிழ்ந்தாள்.

ஏழுமலை நாக்குக்கு 'தண்ணி' காட்டாமல் தெளிவாய் வந்திருந்தார்.

திருமணமான மூன்று பெண்களும், முகத்தில் புன்னகையுடன் காரைவிட்டு இறங்கினர்.

தருண் கடைசியாய்...

வெள்ளை நிறச் சட்டையும், நீல நிற 'ஜீன்ஸ்' பேண்டுமாய் ரொம்பவே வசீகரமாய் இருந்தான்.

"வாங்க... வாங்க..."

"வணக்கம்ங்க..." என்ற வரவேற்பு இத்தியாதிகளுடன் அமர வைக்கப்பட்டனர்.

கல்யாணிக்கு ஏனோ மீனாட்சியைப் பார்த்ததும் ஒரு மாதிரி பயம், மனதைப் பிறாண்டியது.

கைலாசம் சிரிக்க சிரிக்கப் பேசினார்.

"சார்... என்ன பண்றீங்க?"

"ஓய்வு பெற்ற வாத்தியார்!"

"ஓ! இவங்க...?"

மீனாட்சி இடைமறித்தாள்.

"மொத்தம் எனக்கு அஞ்சு பொண்ணுங்க. நாலு பேருக்கு கல்யாணம் ஆகிடுச்சு. ஒரு பொண்ணுக்கு ஆகணும். தருண் எங்களுக்கு மூணாவது பிள்ளை!"



"இன்னொரு பெண் வரலையா?"

"அ... அவ... முழுகாம இருக்கா... டாக்டர் அலையக் கூடாதுன்னு...!"

"பரவாயில்லைங்க. தம்பி பேசவே இல்லையே!"

"அவன் பெரியவங்க முன்னாடி பேச கூச்சப்படுவான். தருண்... பேசுப்பா!"

"என்னப் பேசறதுன்னு புரியலே!"

சங்கோஜத்துடன் சிரித்து வைத்தான் தருண்.

"இவ்வளோ வெக்கப்படுறீங்களே... அதுவும் இந்த காலத்துலே... 'வெரிகுட்!'"


ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |
| **வெளிநாடுகள்** | |
| ஒரு ஆண்டு | ரூ. 1,225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை-600 007.


"நேரமாகுதே... பொண்ணை வரச் சொல்லலாமே!" என்றாள் மீனாட்சி.

"கல்யாணி... !" என்றார் கைலாசம், மனைவியிடம்.

அடுத்த இரண்டாவது நிமிடம் எளிமையாய், அழகாய் தேவதையின் புன்னகையுடன் வந்தாள் சக்தி.

பதற்றத்துடன் அமர்ந்திருந்த தருண், அவளைப் பார்த்ததும் பிரமித்துப் போனான்.

கண்ணதாசனின் கவிதைக்கு உயிர் கொடுத்த பதுமையாய் அவள் நின்றிருந்த விதத்தில், காலை முத்தமிட்டு ஓடிப்போன அலையின் சிலிர்ப்பை உணர்ந்தான்.

'கடவுளே... இவளிடமா பல உண்மைகளை மூடி மறைக்கிறேன்?'

சக்தி மெல்ல தருணைப் பார்த்தாள்.

புகைப்படத்தைவிட நேரில் இன்னும் கம்பீரமாய் இருந்தான்.

அவளுக்கு ரொம்பவே பிடித்துப்போக,

வெட்கத்துடன் தலை கவிழ்ந்தாள்.

வந்திருந்த அத்தனை பேருக்குமே சக்தியைப் பிடித்துவிட, மேற்கொண்டு பேசினார்கள்.

"எங்களுக்குப் பொண்ணைப் பிடிச்சிடுச்சு. உங்கப் பொண்ணுக்கு..." என்று இழுத்தாள் மீனாட்சி.

"பிடிச்சிருக்கு" என்றாள், மெல்லிய குரலில் சக்தி.

அவளின் வார்த்தையும், குரலும்... தருண் இதுவரை வாழ்க்கையில் அனுபவித்திராத உணர்வைத் தந்தன.

"கல்யாணி... சக்தியை உள்ளே அழைச்சிட்டுப் போம்மா. காப்பி, டிபன் எடுத்துட்டு வா!"

சக்தி அழைத்துச் செல்லப்பட்டாள்.

"கல்யாணத்தை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வச்சுக்கலாம். நாங்க எதையும் எதிர்பார்க்கலே. நீங்க உங்க பொண்ணுக்கு என்ன செய்யணும்னு நினைக்கிறீங்களோ... அதைச் செய்யுங்க! என் பிள்ளையும் கைநிறைய சம்பாதிக்கிறான். அதனால பொண்ணு வீட்டை சுரண்டி வாங்கணும்ங்கற அவசியமில்லே. ரொம்பப் பெரிய வீடா இல்லேன்னாலும், சின்ன வீடுதான். அதுவும் சொந்த வீடு. நீங்க எப்ப எங்க வீட்டுக்கு வர்றீங்கன்னு சொல்லுங்க!"

மீனாட்சி பேச... கொஞ்சமாய் நிம்மதி எழ–

கல்யாணி மகிழ்ந்தாள்.

"வர்ற வெள்ளிக்கிழமை வர்றோங்க!"

எல்லோரும் சந்தோஷமாய் பேசிக்கொண்டிருக்க,

கல்யாணி தன் கணவரின் காதில் ஏதோ கூற,

கைலாசம் மெல்ல ஏழுமலையை ஏறிட்டார்.

"என் பொண்ணு, மாப்பிள்ளைகிட்ட தனியாப் பேசணுங்கறா. இது தப்பு இல்லேன்னு நான் நினைக்கிறேன்... நீங்க அனுமதிச்சா..."



"அது எப்படிங்..." என்று பேச ஆரம்பித்த மீனாட்சியை இடைமறித்து,

"எப்படி இருந்தாலும், இனிமேல் 'போன்'ல பேசிக்கத்தான் போறாங்க. இங்கே பேசிக்கறதுலே என்ன தப்பு? தருண்... போ..." என்றார் ஏழுமலை.

மீனாட்சிக்கு மட்டுமில்லே... தருணுக்கும் சற்று பீதியாகவே இருந்தது.

மாடியில் உள்ள அறையில் அவனுக்காகக் காத்திருந்தாள் சக்தி.

உள்ளே நுழைந்தவனை, சிறு புன்னகையுடன் எதிர்கொண்டாள்.

"வாங்க... உக்காருங்க!"

அமர்ந்தவன், "நீங்களும்" என்றான்.

"சக்தின்னே சொல்லலாம்!"

இயல்பாய் தன்னைக் காட்டிக்கொள்ள முயற்சித்தும், அவன் எதிரில் சிரமமாய் இருந்தது.

அவனுக்கும் அவளை அருகில் பார்க்கையில் காற்றில் பறந்த நோட்டுப் புத்தகமாய் படபடத்தது மனசு.

முகத்தில் வழவழப்பும், மென்மையும், மேல் உதட்டின் மேல் பூத்திருந்த வியர்வைத் துளிகளும், உதட்டின் துடிப்பும், தூண்டில் போட்ட கண்களும் சரசரவென காதல்கொள்ள வைத்தன.

"உங்க அப்பா, அம்மா, சகோதரிங்க... எல்லாரையும் பிடிச்சிருக்கு. எனக்கு கூடப் பிறந்தவங்க யாருமில்லே. அதனால என் புகுந்த வீட்டுல நிறைய பேர் இருக்கணும்னு ஆசைப்பட்டேன்."

"ம்."

"எனக்கு சமைக்கத் தெரியாது. இனி கத்துக்கறேன். உங்களுக்கு சமையல்ல என்னென்னப் பிடிக்கும்?"

படபடத்த இமைகளுடன் அவள் பேசிய விதம், மனதை வெகுவாக உருக்கியது.

'இவளிடமா மறைக்கிறோம்? பேசாமல் எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்டால் என்ன?'

"நான் இப்படிப் பேசறது பிடிக்கலையா? பதிலே இல்லையே!"

அவள் முகம் வாடியது.

"சேச்சே..." என்றான்.

"என்ன பிடிக்கும்னு கேட்டேனே?"

"உன்னை!" என்றான், ரம்மியமானப் புன்னகையுடன்.

அந்த ஒற்றை வார்த்தையும், புன்னகையும் சக்தியை பூக்குவியலில் தள்ளிவிட்டன.

★★★

**பெ**ண்கள் என்னதான் நிறையப் படித்து– வானத்தில் பறந்தாலும்... எதிர்பார்ப்பும், ஏக்கங்களும், வெட்கமும், படபடப்பும் நிறைந்த ரோஜாவின் இதழ்களைப் போன்ற மெல்லிய மனம் படைத்தவர்கள்தான்.

சக்தி இயல்பாகவே போர்க்குணம் கொண்டவள். அவள் விருப்பமின்றி எதையும் திணிக்க முடியாது. நல்ல விஷயத்தை அடைய எத்தனை சிரமமும்படுவாள். சிகரத்திலும் ஏறுவாள்.

அப்படிப்பட்டவள் தன் காலமெல்லாம் துணையாக வரப்போகிற ஒரு ஆணை, காலை முதல் இரவு வரை அவனுடனே சாப்பிட்டு, உரையாடி, உறங்கி என இன்னொரு உடம்பில் கூடு பாய்ந்து வாழப் போகும் நபரை, முதன் முறையாய் நேரில் பார்க்கையில், அந்த பரவசத்தை வார்த்தையில் அடைக்க முடியாது. அதுவும் எல்லா வகையிலும் தான் எதிர்பார்த்த ஒரு ஆத்மாவின் பிம்பத்தைப் பார்த்துவிட்டால்... பெண்ணுக்கு உறக்கமேது?

சக்தி தூக்கம் தொலைத்தாள்.

## 9

**வி**மல்–

மூடிய வாய்க்குள் நாக்கால் துழாவி, நண்பனை குறுகுறுவென



பார்த்துச் சிரித்தான்.

"என்ன மச்சான்... ஒரே மாசத்துல மூணு கிலோ எடை போட்டுட்டே போல..."

"நா... நானா... இல்லையே!"

பதறி தன்னை குனிந்து பார்த்துக்கொண்டான் தருண்.

வாய்விட்டுச் சிரித்தான் விமல்.

"கல்யாண மாப்பிள்ளைக்கு இப்ப எதுவும் கண்ணுக்கு தெரியாது மச்சான். பொண்ணு எப்படி? நீ எதிர்பார்த்த மாதிரி இருக்கா?"

"அதைவிட அதிகமாகவே! பயமா இருக்கு விமல். அம்மா ஏகப்பட்ட விஷயங்களை மறைச்சு, பொய் சொல்லித்தான் இந்த இடத்தை முடிச்சிருக்காங்க. விஷயம் தெரிஞ்சதும் அம்பேல்! அதுவும்... எல்லாமே உடனே தெரிஞ்சுப் போயிடும்."

"எல்லாரும் அப்படித்தான்டா! கல்யாணம்னா சும்மா இல்லே! யாரு கண்டா? பொண்ணு வீட்டு தரப்பிலேயும் ஏதாவது பொய் சொல்லி இருக்கலாம். இதெல்லாம் பெரிய விஷயமே இல்லே தருண். பொதுவா பொண்ணுங்கதான் புருஷனை முடிஞ்சு முந்தானைக்குள்ளே வச்சுப்பாங்க.

நீ முந்திக்கிட்டு உன் பொண்டாட்டிய பாக்கெட்டுக்குள்ளே வச்சுக்க. உன் காதலால வசியம் பண்ணக் கத்துக்கடா! அப்புறம் நீ பொய்யாவே சொல்லிட்டிருந்தாலும் அம்மணிக்கு அதெல்லாம் ஒரு பொருட்டே இல்ல!"

"கேக்க நல்லாதான் இருக்கு. ஆனா, சக்தி தைரியமானப் பொண்ணு!"

"உன் கைக்குள்ளே வந்த பிறகு அந்தத் தைரியமெல்லாம் என்னாகப் போகுதுன்னு பாரு!"

"நிஜமாகத்தான் சொல்றியா?"

தருண் ஆர்வமானான்.

" 'அடப்பாவி... நீ சொன்னதெல்லாம் அப்படியே நடந்துடுச்சுடா'ன்னு கல்யாணத்துக்குப் பிறகு நீயே வந்து

சொல்லப் போற பாரு!"

"ஓ...!"

தீவிரமாய் யோசிக்கலானான் தருண்.

★★★

திருமணத்துக்கு இன்னும் இரண்டு மாதங்கள்தான் இருந்தன.

சக்திக்கு தருணிடம் பேச வேண்டும் போல் தோன்றியது.

'யாரிடம் அவரது 'செல்போன் நம்பர்' வாங்குவது? குறைந்தது அவராவது எனக்கு போன் பண்ணலாமே! ஒரு ஆண் நினைத்தால், ஐந்தாவது நிமிடத்திலேயே எப்படியாவது போன் நம்பர் வாங்கிவிட முடியுமே! சரியான பயந்தாங்கொள்ளி!'

அவனும் அதே தவிப்போடுதான் இருந்தான்.

'நம்பர் வாங்குவது பெரிய விஷயமல்ல. ஆனால், பேச ஆரம்பித்து நம் குட்டெல்லாம் வெளிப்பட்டுவிட்டால்?'

இப்படியே பத்து நாட்கள் ஓடிப்போக, பிறகுதான் உறைத்தது.

'ஒருவேளை அவளும் பேச நினைத்து, நம்பர் கிடைக்காமல் ஆபீசுக்கே தேடி வந்துவிட்டால்?'

'போச்சு? நான் வேலை செய்வது இங்கே? அவள் பாட்டுக்கு நான் இல்லாத ஆபீசுக்கு போய் விசாரித்தால்? ஐய்யோ...!'

அலறியவன், அடுத்த நிமிடமே 'பர்மிஷன்' போட்டுவிட்டு, அவள் பணிபுரியும் இடத்துக்குச் சென்றான்.

சற்றும் எதிர்பார்க்காத சக்தி, கொஞ்சம் வெட்கம் கலந்த புன்னகையுடன் வரவேற்றாள்.

"அட... என்ன ஒரு ஆச்சரியம்...!"

"என்ன சக்தி?"

"நானும் இன்றைக்கு உங்களைப் பார்க்க உங்க ஆபீசுக்கு வரலாம்னு நினைச்சேன்?"

"எ... எதுக்கு?"

திடுக்கிடலோடு கேட்டான்.

"இப்ப நீங்க எதுக்கு என்னைப் பார்க்க வந்தீங்க?"



"சு... சும்மாதான்."

"அதே சும்மாதான் நானும்."

"புரியலே..."

"உங்ககிட்ட பேசணும்னு தோணுச்சு. 'நம்பர்' இல்லே. நேர்லேயே வந்து வாங்கிக்கலாம்னு..."

"ஹய்யோ... நானும் அதுக்காகத்தான் வந்தேன்."

"பரவாயில்லே. இப்பவாச்சும் தோணுச்சே?"

"சேச்சே... எனக்கு உன்னைப் பார்த்த நாள்ல இருந்தே பேசணும்னு ஆசைதான். உங்க அப்பாகிட்ட உன் 'நம்பர்' கேக்க பயம். சங்கடமா இருந்துச்சு..."

"கேண்டீனில்' அமர்ந்து, அவளைத் தயக்கமும், காதலுமாய் பார்த்தபடி தேநீரை உறிஞ்சினான்.

உறவுகளற்ற தனிமையில்– சில அடி நெருக்கத்தில் உதடுகள் விரிந்து, சுருங்கிப் பேசுகையில் தென்பட்ட வெண் பற்களின் வசீகரமும், மேலுதட்டை குடை பிடித்து மறைத்த அடர்ந்த, கச்சிதமான மீசையின் ஆண்மையும் அவளுள் இருந்த பெண்மையைச் சீண்டிப் பார்த்தன.

எப்போதும் லொட லொடக்கும் சக்தி, அவனைப் பேசவிட்டு ரசித்தாள்.

அவனின் தயக்கம், கண்ணியம்– சக்தியை அடிக்கடி போன் பண்ண விடாமல் தடுத்தது. அப்படிப் பேசும்போதும், ஆசைகளை வெளிப்படுத்தும் விதமாக பேசுவதைத் தவிர்த்தது சக்திக்கு சற்றே ஏமாற்றமாய் இருந்தாலும், அவன் மேல் மரியாதையை அதிகப்படுத்தியது.

வீட்டில் கல்யாண வேலை நெருக்கவே, வரப்போகும் மாப்பிள்ளை தருண் பற்றி விசாரிக்குமாறு கல்யாணி தன் கணவனிடம் சொல்லவே மறந்துவிட்டாள். தம்பதியர் ஓடியாடி தங்கள் செல்ல மகளின் திருமணத்துக்காக களைப்புற்றனர்.

திருமண நாளும் வந்தது.

அமர்க்களமாய் திருமணமும் நடந்தேறியது.

கைலாசத்தின் வேண்டுகோளாலும், தன் வீட்டு வசதியை மனதில் வைத்தும், முதலிரவை சக்தியின் வீட்டிலேயே வைத்துக்கொள்ள

அனுமதித்தாள் மீனாட்சி.

தருணுக்கு சின்ன உறுத்தல் மட்டும்... ஐந்தாறு நாட்களாய் மனதை கீறிக்கொண்டே இருந்தது.

திருமணத்துக்கு முந்தைய ஐந்து நாட்களும் சக்தி 'போன்' பண்ணவில்லை. இவனாக பண்ணினாலும் 'பிஸி' என்று சொல்லி ஓரிரு வார்த்தைகளில் இணைப்பை துண்டித்தாள்.

வரவேற்பின்போதும் சரி, தாலி கட்டும்போதும் சரி... சக்தியின் முகத்தில் ஒட்டப்பட்ட புன்னகைதான் இருந்தது.

அவனைப் பரவசமாய் பார்க்கும் பார்வை இல்லை.

'என்ன ஆச்சு இவளுக்கு?'

சம்பிரதாய முறைப்படி பால் சொம்புடன் வந்த சக்தி, அவனைப் பார்த்து, "ஸாரி, எனக்கு இந்த கால்ல விழற கலாச்சாரம் எல்லாம் பிடிக்காது. ஆனா, உங்களுக்கு பிடிக்கும்னா விழறேன்!" என்றாள்.

"சேச்சே... என்ன சக்தி நீ... எனக்கும் கொஞ்சம்கூட பிடிக்காது. நமக்குள்ளே எதுக்கு இந்த மாதிரி 'பார்மாலிட்டீஸ்'? என்னுடைய கனவு தேவதை நீ!"

அவள் கையைப் பற்றி கட்டிலில் அமர்த்தினான்.

"காலையில... கல்யாண கோலத்துல நீ எப்படி இருந்தே தெரியுமா?"

அவளது கையை எடுத்து தன் உள்ளங்கையில் வைத்து மெல்ல அழுத்தினான்.

சக்தி இயல்பாக விடுவித்துக்கொண்டு, "நாம கொஞ்சம் மனசு விட்டுப் பேசலாமா தருண்?"

"எ... என்ன... என்ன விஷயம் சக்தி?"

"ஏன் பதறீங்க? வாழ்க்கையைத் தொடங்குறதுக்கு முன்னாடி ஒளிவு மறைவு இல்லாம பகிர்ந்துக்கிறதும் நல்லதுதானே?"

"கண்டிப்பா...! பேசு சக்தி!"

உள்ளுக்குள் உற்பத்தியான பதற்றத்தை மென்று விழுங்கினான்.

"நீங்க என்கிட்ட எதையாவது மறைச்சி இருக்கீங்களா?"

சற்று யோசித்தவன், தெளிவானான்.

"ஆமா சக்தி! சில நிர்ப்பந்தங்களால மட்டுமில்லே... உன்னை 'மிஸ்' பண்ணிடக் கூடாதுங்கற ஆசையாலயும் சில பொய்கள் சொல்ல வேண்டியதாயிடுச்சு."

அவனையே கூர்ந்து நோக்கினாள்.

"என்கூடப் பிறந்தவங்க அஞ்சு பேர். அதுல மூணு பேருக்குத்தான் கல்யாணமாகி இருக்கு. இன்னும் ரெண்டு தங்கச்சிக்கு ஆகணும். ஆனா, உண்மையைச் சொன்னா பொண்ணு தர யோசிப்பாங்க. அதுக்காக ஒரு தங்கச்சிக்குத்தான் கல்யாணம் ஆகணும்னு பொய் சொல்ல வேண்டியதாப் போச்சு!"

"..........?"

"அப்புறம்... நா... நான்... 'சாப்ட்வேர் என்ஜினீயர்' கிடையாது..."

"தெரியும். ஒரு துணிக்கடையில சூப்பர்வைசர் கம் கன்சல்ட்டன்ட்!"

"சக்தி... உனக்கு எப்படி இது?"

"தெரியும். வேற ஏதாவது பாக்கி இருக்கா?"

"இன்னும் ஒண்ணு...!"

"ஓ..." என்றாள், திடுக்கிடலோடு.

"என் வயசு இருபத்தொன்பது இல்லே... முப்பத்தி நாலு!"

"எ...ன்...ன...து?"

கண்கள் நனைய கத்தினாள்.

## 10

"தருண்... நீங்களா? இப்படியெல்லாமா? எதிர்ப் பார்க்கலீங்க... எதுக்குங்க அசிங்கமா இத்தனை பொய் சொல்லி... கஷ்டமா இருக்குங்க!"

"பிளீஸ் சக்தி... ஸாரி... வெரி ஸாரி! இப்படி வார்த்தையிலே மன்னிப்பு கேட்டாலும், நான் பண்ணின விஷயம் ரொம்ப மலிவானது. சத்தியமா சொல்றேன்... உன்னைப் பொண்ணு பார்த்த அன்னைக்கே எல்லா உண்மையையும் சொல்லிடணும்னு



நினைச்சேன். ஆனா, உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சு. எதுக்காகவும் உன்னை இழக்க நான் விரும்பல. 'ரியல்லி... ரியல்லி... ஐ லவ் யூ சக்தி!'"

"..........!"

கண்களைத் துடைத்துக்கொண்டு அவனைப் பார்த்தாள்.

முகம் முழுக்க அவமானமும், வருத்தமும் மிகுந்திருந்தது.

"என் வேலை விஷயத்தைப் பத்தி உனக்கு எப்படி....?"

"ஒரு வாரம் முன்னாடியே தெரியும். உங்களுக்கு ஆச்சரியம் தரணும்னு நீங்க சொன்ன ஆபீசுக்கு வந்திருந்தேன். அப்பதான் அங்க வேலை செய்யலேன்னு தெரிஞ்சது. ரொம்ப அதிர்ச்சியா இருந்துச்சு. ஒரு நண்பர் மூலமா உங்களைப் பத்தி விசாரிச்சப்ப, உங்க சகோதரி பற்றி சொன்ன பொய்யும் தெரிய வந்துச்சு. ஆனா, இப்ப புதுசா தெரிஞ்ச பொய் உங்க வயசு!"

".........."

"என்கிட்ட உண்மையச் சொல்லி இருக்கலாமே தருண்? என்னோட எதிர்பார்ப்புப்படி சில விஷயங்கள் சரி வரலேன்னாலும், மனசுக்குப் பிடிச்சிட்டா இதெல்லாம் பெரிய விஷயமே இல்லீங்க!"

"ச...க்...தி!" என்றான் பிரமிப்பாக.

"எனக்குத் தெரிஞ்ச எந்த விஷயமும் என் அப்பா, அம்மாவுக்குத் தெரியாது. தயவுசெய்து இனி எதையும் என்கிட்ட மறைக்காதீங்க... பிளீஸ்!"

"ஸாரிடா..."

"மனசு ரொம்ப வலிக்குதுங்க. இந்த வலியோட நம்ம வாழ்க்கைய ஆரம்பிக்க வேண்டாம். ஜீரணிக்க கொஞ்சம் கால அவகாசம் வேணும். குறைந்தது ஒரு நாளாவது வேணும். பிளீஸ்... நான் அப்படி படுத்துக்கட்டுமா?"

தயவுடனும், வலியுடனும் கூறியவளை... எதிர்நோக்க திராணியின்றி தலை கவிழ்ந்தான் தருண்.

★★★

ஒரு நாள், இரண்டு நாள் அல்ல... தன்னை இயல்பு நிலைக்குக் கொண்டுவர மூன்று நாட்கள் எடுத்துக்கொண்டாள். அன்று சில விஷயங்களை தெளிவுபடுத்தினாள்.

மாமியாரின் வற்புறுத்தலும் இதற்கு காரணம். தருணின் பொறுப்புக்கள் இந்த குடும்பத்தில் அதிகம். அதனாலேயே திருமண வயதைத் தாண்டியும், கல்யாணம் பற்றி யோசிக்காமல் இருந்திருக்கிறான் என்று எண்ணும்போது, கணவன் மீது கொஞ்சம் பரிதாபம் ஏற்படவே செய்தது.

அன்றிரவு ஒதுங்கி இருந்த தலையணையை அருகருகே போட்டு சக்தி சரிசெய்ததைப் பார்த்து ஆர்வமாய் அவளைப் பார்த்தான் தருண்.

"மன்னிச்சிட்டியா சக்தி? இந்த மூணு நாளா உன் முகத்தைப் பார்க்க தைரியமில்லாம தலை குனிஞ்சு நடந்தப்ப, அசிங்கமா இருந்துச்சு."

"சரி... அதெல்லாம் விடுங்க. இனிமேல் நமக்குள்ள எந்த ஒளிவுமறைவும் இருக்கக்கூடாது."

"கண்டிப்பா! உன்கிட்ட ஒரு கேள்வி?"

"சொல்லுங்க!"

"நீ ரொம்ப தைரியமான பொண்ணு. நான் பொய் சொன்னது தெரிஞ்சும், எப்படி கல்யாணத்தை நடக்க அனுமதிச்சே?"

"உண்மைதாங்க... நான் யார்கிட்டேயும் பொய் சொன்னதில்லை. அதேமாதிரி என்கிட்டேயும் பொய் சொல்லக் கூடாதுன்னு எதிர்பார்ப்பேன். இது அதிர்ச்சியான விஷயம். கல்யாண ஏற்பாடெல்லாம் நடந்து, முழுக்கவே அழைப்பிதழ் கொடுத்தபின் நிறுத்தினா என் பெற்றோர் தாங்க மாட்டாங்க. தவிர, உங்களோட மூணாவது பொய்யும் அப்பவே தெரிஞ்சிருந்தா... ஒருவேளை இந்தக் கல்யாணம் நடந்திருக்காது!"

"ச...க்...தி!"

"சரி, அதான் எல்லாம் முடிஞ்சுப் போச்சே? இன்னும் எதுக்கு அதைப் பத்தி? உங்களைப் பார்த்தா இருபத்தொன்பது என்ன...



இருபத்தஞ்சு வயசு மாதிரிதானே தெரியறீங்க?"

அந்த வார்த்தைகளில் அப்படியே இளகினான்.

"ம்..." என்றான் ஆச்சர்யமாய்.

"ம்" என்று அவளும் உதட்டைப் பிதுக்கி ஆமோதித்தாள்.

அவளருகே நெருங்கியவன்... அவள் மூச்சின் வெப்பக்காற்று மோத... கிறக்கமாய் கேட்டான்.

"இன்னிக்காவது ஆரம்பிக்கலாமா?"

"எ...தை?"

கண்களில் மருட்சியும், வெட்கமும் போட்டியிட்டன.

"வாழ்க்கையை!"

"ச்சீ!"

அவனைப் பார்க்கும் திராணியற்ற நாணம், அவன் தோளில் முகம் புதைத்துக்கொள்ள வைத்தது.

★★★

**வா**ழ்க்கை ரம்மியமாய் செல்கிறது. தேனிலவுக்காக மூணாறு சென்று வந்தனர். தருணின் வற்றாத ஜீவநதியாய் உற்பத்தியான நேசத்துக்கு அடிமைப்பட்டுப் போனாள்.

அவனால் ஏற்பட்ட காயத்தின் வடுக்கள்கூட உதிர்ந்து போயின. வசதியாய் பிறந்து வளர்ந்த சக்தி... சிறிய புகுந்த வீட்டை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டாள், வளைந்து கொடுத்தாள்.

'மருமகள் எல்லா உண்மையும் தெரிந்தும், எல்லோரிடமும் பாசம் காட்டுகிறாளே!' என்று நெகிழ்ந்து போனாள் மாமியார் மீனாட்சி. அதே நேரம் தான் நினைத்ததெல்லாம் அவள் மூலம் நிறைவேறும் என்ற ஆசையும், எதிர்பார்ப்பும் அதிகமானது.

பின்னொரு நாளில் உண்மைத் தெரிந்து வருத்தமோ– பிரச்சினையோ ஏற்படாதிருக்க, ஒரு சந்தர்ப்பத்தில் தன் தந்தையிடம் அவளே– கணவன் வீட்டில் மறைத்த உண்மைகளை எல்லாம் நாசூக்காய் கூறிவிட்டாள்.

கைலாசம் ரொம்பவே வேதனைப்பட்டார். அதே வேளை மகளின் வாழ்க்கை நலம் கருதி அமைதி காத்தார். எல்லாவற்றுக்கும்

மேலாக, சக்தியின் முகத்தில் தென்பட்ட பூரிப்பு, பூரண நிம்மதியைத் தந்தது.

ராகினியிடமும், ரேகாவிடமும் நன்கு நெருங்கிப் பழகினாள் சக்தி. அவர்களும் நன்றாகப் பழகினர் என்றாலும், இயல்பான குணமான– ஆணவமானப் போக்கு அவர்களிடம் தென்படவே செய்தது.

திருமணத்துக்காக எடுத்த விடுமுறைகள் கரைய, தருண் பணிக்குத் திரும்ப, அடுத்த இரண்டாவது நாள் சக்தியும் கிளம்பினாள்.

"ஒரு பேரனோ, பேத்தியோ பெத்துக் கையிலே தருவேன்னுப் பார்த்தா, ஆபீசுக்கு கிளம்பிட்டியே சக்தி?" என்றாள் ஒப்புக்காக மீனாட்சி.

"இப்ப... சம்பாதிக்கறதும் முக்கியம்தானே அத்தே?"

மெல்லியக் கீற்றாய் புன்னகை பூக்கச் சொன்னாள்.

"இதுவும் நாத்துல ஒரு வார்த்தை! பார்த்துப் போம்மா!"

அவள் இருசக்கர வாகனம் தெருமுனையைக் கடக்கும் வரை வாசலிலேயே நின்றாள் மாமியார்.

"என்னம்மா... அண்ணி மேல பாசம் பொங்கி வழியுது?"

வாளி நிறைய துவைத்த துணிகளுடன் எதிர்ப்பட்டாள் ரேகா.

"என் மருமகளாச்சே?"

"மருமகளா... மகாலட்சுமியா?"

"வாய்க் கொழுப்பு ஜாஸ்திடி உனக்கு! போ... போய் துணிய காயப் போடு!"

"பார்த்தும்மா... ரொம்ப எதிர்பார்த்து ஏமாந்து போயிடாதே... அண்ணி ரொம்ப உஷாராத் தெரியறாங்க."

"வாய மூடிக்கிட்டுப் போன்னு சொல்லிட்டேன்" என்றாள் கடுப்புடன்.

அடுத்த பத்து நாள் கழித்து சம்பளம். கணவன்– மனைவி இருவருக்கும் ஒரே நாள்தான் கிடைக்கும்.



தருண் திருமணமாகி முதன் முதலாக வாங்கும் சம்பளம். 'இதுநாள் வரை சரி! இப்போது மனைவி வந்துவிட்டாள்.

'இதை யாரிடம் தருவது? அம்மாவிடமா... சக்தியிடமா?'

திடீரென பிராணவாயு குறைந்ததுபோல் திணறினான்.

'புதிதாய் ஏதும் பிரச்சினை முளைக்குமா?'

தயங்கித் தயங்கி சக்தியிடம் வந்தான்.

அவளும் அப்போதுதான் வீடு திரும்பி– புத்துணர்வாக குளித்ததில் சோப்பின் மணம் ஈர்த்தது. இரவு உடையில், மாலையில் பூத்த மல்லிகையைப் போல் இருந்தாள்.

"சக்தி..."

"என்னங்க?"

"இந்தா?"

"என்னது?"

"சம்பளப் பணம்!"

"இதென்னப் புதுசா? முகமெல்லாம் வேர்த்திருக்கு? அசட்டு முழி முழிக்கிற பாக்யராஜ் சார் மாதிரியே இருக்கீங்க! இத்தனை நாளா அத்தைக்கிட்டதானே குடுத்தீங்க? அவங்ககிட்டேயே குடுங்க!"

'அப்பாடா' என்றிருந்தது தருணுக்கு.

சம்பளம் தன் கைக்கு வந்ததும்தான் மீனாட்சியும் நிம்மதியானாள்.

ஆனால்...?

## 11

சம்பளம் வாங்கி நான்கைந்து நாளாகியும் சக்தி அதைப் பற்றி மூச்சே விடாதது, மீனாட்சிக்கு என்னவோ போல் இருந்தது.

'எப்படி இவளிடம் கேட்பது?'

அலுவலகம் புறப்படும் அவசரத்தில் இருந்த இருவரும்

சிற்றுண்டி சாப்பிட அமர்ந்தனர்.

பூப்போன்ற இட்லிகளை தட்டில் வைத்து தக்காளிச் சட்னி போட்டாள்.

"சட்னி சூப்பர் அத்தை! எனக்கும் சமைக்கக் கத்துக் கொடுங்க. நானும் சமைக்கிறேன்."

"எதுக்கும்மா? அதான் நான் இருக்கேனே? ஆபீசுக்கு போறப் பொண்ணுக்கு அடுப்படியிலே என்ன வேலை?"

"எப்பவுமேவா ஆபீசுக்கு போய்ட்டிருக்கப் போறேன்? குழந்தைப் பெத்துக்கிட்டா மூணு மாசம் விடுப்பு போடலாம். இல்ல... ராஜினாமா பண்ண வேண்டியதுதான்!"

மீனாட்சி திடுக்கிட்டாள்.

அப்போது, அணிந்திருந்த சட்டையை சரி செய்தவாறே அங்கு வந்தான் தருண்.

"சக்தி, சீக்கிரமாய் சாப்பிடு... ஆபீஸ் வேலையா நங்கநல்லூர் வரைக்கும் போகணும்னு சொன்னியே! நான் 'கரண்ட் பில்' கட்டிட்டு ஆபீசுக்கு போயிடுவேன். 'பர்மிஷன்' போட்டுட்டேன்."

"சரிங்க!"

"ஏம்மா சக்தி... சம்பளம் வாங்கிட்டேயில்லே?"

மீனாட்சி இதற்கு மேல் தாங்கமாட்டாமல் கேட்டேவிட, தருண் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"சம்பளமா கையில தரமாட்டாங்க அத்தை! நேரடியாக என் 'பேங்க் அக்கவுண்ட்'ல போட்டிருவாங்க?"

"அதை எடுக்க முடியாதா?"

"ஏன் முடியாது? தாராளமா எடுக்கலாமே!"

"அப்ப ஏம்மா எடுக்கலே?"

"எதுக்கு அத்தை எடுக்கணும்? அது என் குழந்தைங்களுக்காக வைக்கிற சேமிப்பு. உங்க பிள்ளையோட சம்பளம், தாராளமா இந்த குடும்பத்துக்கு போதுமே... என்னங்க நான் சொல்றது?"– கணவனைப் பார்த்துக் கேட்டாள்.

"ரொம்ப சரி... சக்தி!"



மீனாட்சி இதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. பேயறைந்தவள் போல் ஆகிவிட்டாள்.

சக்தி புறப்பட்டுவிட, தருண் தயாரானான்.

"'கரண்ட் பில்' அட்டையை எடும்மா!"

"இரு... கொஞ்சம் பேசணும்."

"என்னம்மா... இப்ப போய்? நேரமாய்டுச்சு!"

"இங்கே தலைக்கு மேலே வெள்ளம் போகுது ராசா! என்ன... இப்படி பேசிட்டுப் போறா உன் பொண்டாட்டி. பெக்காத புள்ளைக்கு பணம் சேர்த்து வைக்கிறாளாமா? பெத்தப் பொண்ணுங்களை எப்படிடா கரையேத்தறதுன்னு நான் தவிச்சிட்டு இருக்கேன். நீ என்னடான்னா 'சரிதான் சக்தி'ன்னு தாளம் போடறே?" என்றாள் உஷ்ணத்தில் விழிகள் சிவந்து.

"என்னை என்னம்மா பண்ணச் சொல்றே? நாம சொன்ன பொய்யெல்லாம் கல்யாணத்துக்கு முன்னாடியே தெரிஞ்சு ரொம்ப கோவிச்சுக்கிட்டாம்மா!"

"என்ன பிரயோஜனம்? காசை கண்ணுல காட்ட மாட்டேங்கறாளே! என்ன பண்ணுவியோ, ஏது பண்ணுவியோ தெரியாது. எனக்குப் பணம் வந்தாகணும். என் பொண்ணுங்க வாழ்க்கையும் எனக்கு முக்கியம்."

"கடவுளே!"

அங்கலாய்ப்புடன் புறப்பட்டான் தருண்.

அவன்கூட சக்தி இப்படி வெளிப்படையாக, அதை 'தன் பணம்' என்ற ரீதியில் பேசுவாள் என எதிர்பார்க்கவில்லை. ஆனாலும், அவள் பேசியதில் என்ன தவறு என்றுதான் தோன்றியது. அதே நேரம் இந்த ஒரு மாதத்தில், அவனறிந்த வகையில் சக்தி இப்படி பேசும் ரகமில்லை என்றும் புரிந்தது.

'உள்ளுக்குள் அவளுக்கு அம்மா மீது கோபம் இருக்கிறதோ?' என்று எண்ணினான்.

'அவளிடம் போய், உன் சம்பளப் பணத்தை அம்மாவிடம் கொடு! என் தங்கைகளைக் கரையேற்ற வேண்டாமா? என்று

கேட்பது எத்தனை அபத்தம்? மனைவியிடம் பிச்சை எடுப்பதா? சேச்சே... என்னைப் பற்றி என்ன நினைப்பாள்? பொய் சொல்லி கல்யாணம் பண்ணினதெல்லாம் இந்த சம்பள பணத்துக்காகத்தான் என்று நினைத்துக்கொள்ள மாட்டாளா?

நினைப்பதென்ன? அதானே உண்மையும்கூட! ஐய்யோ வேண்டாம்! வாழ்க்கை அருமையாய் போகிறது. அதை நாமே கெடுத்துக்கொள்ள வேண்டாம். சக்தி மாதிரி ஒரு பெண், மனைவியாக அமைந்ததெல்லாம் பெரிய விஷயம்.

என் வாழ்க்கையும் முக்கியம் அல்லவா? மறுபடி சக்தி மனதில், 'நீ இவ்வளவுதானா?' என்று நினைத்துவிட இடம் தரக்கூடாது. வருமானத்தை அதிகரிக்க என்ன வழிங்கறதை மட்டுமே இனி யோசிக்கணும்!'

முடிவெடுத்த தருண்... 'பைக்'கின் வேகத்தை அதிகப்படுத்தினான்.

★★★

**ம**திய உணவு இடைவேளையின்போது, சக்திக்கு சாப்பாடு இறங்க மறுத்தது.

'நான் அப்படி பேசியிருக்கக் கூடாதோ? தருண் என்னைப் பற்றி தப்பாக நினைத்திருப்பாரோ? ஆனால், வேறு வழி? அத்தையின் எண்ணம் என்ன என்பதை திருமண விஷயத்திலேயே பார்த்துவிட்டேனே? வெளிப்படையாய்- உண்மையாய் நடந்திருந்தால், கேட்கும் முன்பே கொடுத்திருப்பேன்.

காட்டும் அக்கறைக்கூட சம்பளத்துக்காக எனும்போது, ஏன் தர வேண்டும் என் உழைப்பை? உழைப்பவளுக்குத் தெரியாதா அதை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று?

பொறுப்பற்ற குடிகார கணவரை கன்னத்தில் ரெண்டு அறை அறைந்து திருத்த மனமில்லை.

எந்நேரமும் கண்ணாடி முன் நிற்கும் ரேகாவையும், புத்தகத்துக்குள் வேறு எதையோ ஒளித்து வைத்துப் படிக்கும் ராகினியையும் கவனிக்க நேரமில்லை.

இப்படிப்பட்ட பெண்மணியிடம் மாதம் நாற்பத்தைந்தாயிரம்



போனால் என்ன ஆகும்? நான் பேசியது தப்பே இல்லை.'

தன்னைத் தேற்றிக்கொண்டாள்.

★★★

**ஜ**ன்னல் திரையை விலக்கினாள். வானில் வளர்ந்துகொண்டிருந்த நிலவின் கீழ் பளீரென ஒரு நட்சத்திரம் மின்னியது.

'அது என்ன கோளாய் இருக்கும்? வியாழனா, வெள்ளியா?'

"மசமசன்னு நிக்காதே தடிமாடே! கூடமாட ஒத்தாசை பண்ணு! உங்களை உட்கார வச்சு, வடிச்சுக் கொட்ட நான் என்ன சமையல்காரியா?"

ஆராய முற்பட்ட சக்தியின் மனவோட்டத்தைத் தாக்கின மீனாட்சியின் வார்த்தைகள்.

'அது ரேகாவையோ, ராகினியையோ கேட்பதுபோல் தன்னை நோக்கி வீசப்படும் அமில வார்த்தைகள். இனி, இதுபோல் கணைகள் அடிக்கடி தாக்கக்கூடும். எதிர்கொள்ள வேண்டியதுதான்!' என்று நினைக்கும்போதே மனசு வலித்தது.

கூடத்துக்கு வந்தாள்.

ராகினி, சப்பாத்தி தட்டிக்கொண்டிருந்தாள்.

"குடு ராகினி... நான் தட்டித் தர்றேன். நீ போய் படி!" என்றாள்.

"வேணாம்... வேணாம்... அவளே செய்யட்டும். சாப்பிடுறது கொஞ்சமாவது ஜீரணம் ஆக வேண்டாமா? நீ உள்ளே போம்மா... ஆபீசுல உழைச்சுட்டு அலுப்பா வந்திருக்கே... போய் ஓய்வெடும்மா!"

மீனாட்சி இயல்பாய் சொன்னாளோ, இல்லை கிண்டலாய் சொன்னாளோ... ஆனால், சக்திக்கு உறுத்திற்று.

அவளை ரொம்ப நேரம் யோசிக்க விடாமல் தருண் வந்து சேர்ந்தான்.

சக்தி, அவனுக்காக தேநீர் போட்டு எடுத்துக்கொண்டு அறைக்குள் நுழைந்தாள்.

"ஏன் தருண் இன்னைக்கு தாமதம்?"

தம்ளரை வாங்கிக்கொண்டு, இடக்கையால் அவள் கன்னத்தைச் செல்லமாய் தட்டி, "டீ தந்ததுக்கு ரொம்ப நன்றி! சூரத்துல இருந்து நிறைய 'லோடு' வந்துடுச்சு. கணக்கு பார்க்க வேண்டியதா போச்சு!"

ஒரு வாய் குடித்து விட்டு– 'லுங்கி'க்கு மாறி– மறுபடி தம்ளரை கையில் எடுத்தான்.

"டீ நல்லா இருக்கா... நானே போட்டேன்!"

"சூப்பர்! என் குட்டிம்மா மாதிரியே!"

கட்டில் மேல் உட்கார்ந்தவனின் பக்கத்தில் அமர்ந்து, அவனது தோளில் முகவாயை வைத்து அழுத்திக்கொண்டாள்.

"என்னைத் தப்பா எடுத்துக்கலியே தருண்?"

"எதுக்குடா?"

"காலையில் உங்க அம்மாக்கிட்ட அப்படி பேசினதுக்கு?"

"சத்தியமா இல்லே... வேற எதையாவது பேசலாமே செல்லம்?"

சக்தி சிரித்தபடி–

அவன் தோளை வலிக்காமல் கடித்தாள்.

தருண் அவளை வலக்கையால் இறுக்கினாள்.

## 12

ஏழுமலை எதைப் பற்றியும் கவலைப்பட்டவராகத் தெரியவில்லை. காலையில் சிற்றுண்டி சாப்பிட்ட பழக்கமெல்லாம், பள்ளிக்கூடத்தில் இருந்து வீட்டுக்கு அனுப்பிவிட்ட அன்றே நின்றுவிட்டது. காலையிலேயே 'தண்ணி'யில் மிதப்பார். போதை இறங்கினால் மதியச் சாப்பாடு. இல்லாவிட்டால் இரவுதான்.

மீனாட்சி அவரிடம் தினசரி ஒரு வார்த்தைப் பேசுவதுகூட அபூர்வம். எதிர்பார்ப்புகள் பலவும் அவரால் சிதறுண்டுப் போனதால், மனம் பொடிப் பொடியாய் சிதறி இருந்தது.



அவளுடைய கவலையெல்லாம் தன் பெண்களின் திருமணம் பற்றிதான். ஓடியோடி உழைத்து விடுமுறை நாளில் உற்சாகமாய் ஓய்வு எடுப்பது போல் ஞாயிறுகளின் மாலையிலும் உள்ளே சரக்குப் போக வேண்டும் ஏழுமலைக்கு!

சக்தி அந்த வீட்டுக்கு வந்தபோதே அவரைப் பற்றி புரிந்துபோனது. தான் ஆசைப்பட்ட கூட்டுக் குடும்பம் அதுவல்ல என்று உணர்ந்தபோது, ஆயாசமாக இருந்தது. ஒரே ஆறுதல்... தருணின் அள்ள அள்ளக் குறையாத காதல்!

சக்தியைக் குழந்தையாய் எண்ணிக் கொஞ்சினான். காதலியாய் உருகினான். தாயாய் அடங்கிப் போனான்.

அதற்காகவே எதை வேண்டுமானாலும் பொறுத்துக்கொள்ள, சக்தி தயாரானாள்.

அதீத காதலின் விளைவு... சக்தி கர்ப்பமானாள். அந்த செய்தியைக் கேட்டு ஆனந்த எல்லையில் கண்ணீரோடு மனைவியை மூச்சு முட்ட முத்தமிட்டான்.

"எப்படி சொல்றதுன்னு தெரியலே சக்தி! ஆனா, நான் பிறந்து–வளர்ந்து அடைஞ்ச சந்தோஷத்திலேயே உச்சபட்ச சந்தோஷம் இதுதான்! என்னை ஒரு ஆணாய் மட்டுமல்ல, தகப்பன் என்கிற அடுத்த பதவியையும் குடுத்திட்டே... நன்றிடா, நன்றிடா குட்டிம்மா!"

"என்ன தருண்? சந்தோஷம்ங்கறது உங்களுக்கு மட்டும்தானா? அம்மாங்கற கிரீடத்தை சூட்டி என்னை அழகுப்படுத்திட்டீங்களே... அதுக்காக நான் உங்களுக்கு என்ன தரட்டும்?"

"ஆயிரம் முத்தம்?"

"எப்பவும் இதே ஞாபகம்தானா? வேற பேசலாம்!"

வெட்கத்துடன் சிணுங்கினாள்.

"என்ன குழந்தை வேணும்? ஆணா, பெண்ணா?"

"அதை நானில்லே கேக்கணும்! சொல்லுங்க, ஆணா, பெண்ணா?"

"முதல்ல பெண்... அதுவும் உன்னை மாதிரி... தேவதை போல.

அப்புறம் ஒரு பையன்! அவனும் உன்னை மாதிரி, கம்பீரமா... ராஜா மாதிரி!"

"அதென்ன ரெண்டு பேரும் என்னை மாதிரி? பொண்ணு உங்களை மாதிரி, பையன் என்னை மாதிரி... இந்த 'டீலிங்' சரியா?"

"இப்ப என் கடமை இன்னும் கூடிடுச்சு சக்தி! நம்ம குழந்தைகளுக்காகவும் நிறைய சம்பாதிச்சாக வேண்டும். நான் 'பாஸ்போர்ட்'டுக்கு விண்ணப்பித்து இருக்கிறேன் சக்தி! இன்னும் ரெண்டு நாள்ல விசாரணைக்காக வீட்டுக்கு போலீஸ் வருவாங்க. அம்மாகிட்டே சொல்லி வைக்கணும்!"

தருண் முகம் கொஞ்சம் சிவந்தது.

சக்தி அதிர்ந்தாள்.

"என்ன தருண்... திடீர்னு குண்டைத் தூக்கிப் போடுறீங்க?"

"தப்பா எடுத்துக்காதே சக்தி... படிச்சவ நீ! என்னைப் புரிஞ்சுக்க. யாருக்காகவும், யாரையும் விட்டுக் கொடுத்துட முடியாது. ரேகாவுக்கும், ராகினிக்கும் நான்தான் ஒரு வழி காட்டணும். அதைக் கொஞ்சம் கொஞ்சமா சேர்த்து முடிக்கறதுக்குள்ளே நம்ம குழந்தைக்கே இருபது வயசாகிடும். கடந்த ரெண்டு மாசமா இதுக்கான வேலையாகத்தான் அலைஞ்சேன். இன்னும் பத்து நாளோ, ஒரு மாசமோ... வெளிநாட்டுல வேலை கிடைச்சிடும்!"

"இங்கே பாருங்க! நான் அன்னைக்குப் பேசினது தப்புன்னா... ஸாரி! என்னோட சேமிப்புகள் இருக்கு. மாசாமாசம் சம்பளம் வரும். எல்லாம் சேர்த்து உங்க தங்கைங்களோட..."

"ப்ளீஸ்"

இடைமறித்தான் தருண்.

"நான் எப்பவும் உன்னைத் தப்பா நினைக்க மாட்டேன் சக்தி! அம்மாவோட எதிர்பார்ப்பைத்தான் தப்புன்னு சொல்வேன். என் அப்பா பண்ணின தவறுக்கு உன்னோட இத்தனை வருஷ உழைப்பை தண்டமா அழணுமா? வேண்டாம்டா! அது நம்மக் குழந்தைக்கு மட்டும்தான். சரியா...?"

"........"



"அநேகமாக அபுதாபியிலதான் வேலையா இருக்கும்னு நண்பன் சொன்னான். நல்ல சம்பளம்! நாலஞ்சு வருஷம் ஒப்பந்தம்..."

"நாலஞ்சு வருஷமா?"

கண்களில் மிரட்சி.

"எனக்கே கஷ்டம்தான்! ஆனா, வேற வழி தெரியலே. பிறக்கப்போற குழந்தையக்கூட நான் நாலஞ்சு வருஷம் கழிச்சிதான் பார்ப்பேன். பிரிவும், வலியும் உனக்கு மட்டுமில்லே... எனக்கும்தான்! நீதான் என்னை பலப்படுத்தி அனுப்பணும்!"

தாயான சந்தோஷத்தை எல்லாம் போர்வை போட்டு மூடிவிட்டது அவன் சொன்ன அதிர்ச்சி செய்தி!

★★★

**தா**யும், தங்கைளும் தருண் சொன்னதைக் கேட்டு எம்பிக் குதிக்காத குறைதான்!

"எப்பப் போறே? இந்த மாசமேவா? எவ்ளோ சம்பளம்? ஆயிரம் சொல்லு... சக்தி ராசியானவதான்! அவ வந்த நேரம் நீ வெளிநாடு போகப் போறே!"

சக்திக்கு மாமியாரின் பேச்சு கசப்பாய் இருந்தது.

'மகனை ஆண்டுக்கணக்கில் பிரியப் போகிற வேதனை துளியும் இல்லை. அவர்களுக்குத் தேவை பணம்! அது எப்படி வந்தால் என்ன?'

"அண்ணா... செண்ட், வாட்ச், கேமரா எல்லாம் வாங்கி அனுப்பி வைண்ணா!"

"அப்படியே ஒரு 'மேக்கப் செட்'!"

ஏழுமலைதான் தீவிர யோசனையுடன் மவுனமாக இருந்தார். 'பைக்'கை துடைத்துக்கொண்டிருந்த மகனிடம் வந்தார்.

"அவசியம் வெளிநாடு போயாகணுமா?"

"..........!"

ஏறிட்டு முறைத்து தலை கவிழ்ந்தான்.

"குழந்தை உண்டாகி இருக்கிற புள்ளையை விட்டுட்டு நீ போறது சரியில்லே... ரெண்டு பேரும் வேலைக்குப் போகட்டும்.

அவங்க கல்யாணத்துக்கு சேர்க்கட்டும். சிக்கனமா இருந்தா எதுவுமே நடக்கும்!"

தருண், அப்பாவை கோபமாய் பார்த்தான்.

"இதைச் சொல்ல உனக்கென்ன தகுதி இருக்கு? இத்தனை வருஷமா உன் சுமையைத்தான், நான் சுமந்திட்டிருக்கேன். நீ ஒழுங்கா இருந்தா, எனக்கு ஏன் இவ்வளவு கஷ்டம்? இப்ப யோசனை சொல்ல வந்துட்டே?"

"நான் சரியில்லேதான்... ஒத்துக்கறேன். ஆனா, நல்லதை எடுத்துச் சொல்ல நல்லவனா இருக்கணும்னு அவசியமில்லே, பாசமா இருந்தாலே போதும்!"

அதற்கு மேல் அவர் பேச்சைக் கேட்க விருப்பமின்றி உள்ளே வந்துவிட்டான் தருண்.

அடுத்தடுத்து சில நாட்களில் 'பாஸ்போர்ட்', 'விசா' எல்லாம் வந்தன. ஐந்து ஆண்டுகள் ஒப்பந்தம்! மாதம் எழுபதாயிரம் சம்பளம்.

தனிமையில் கண்ணீர்விட்ட கணவனைப் பார்த்த மனம் துவண்ட சக்தி, தன்னை அவன்முன் உற்சாகமாய் காட்டிக்கொண்டாள்.

"அஞ்சு வருசம்தானே? பஞ்சாகப் பறந்துடும். யோசிச்சுப் பார்த்தா... நீங்க சொல்றதுதான் சரின்னு புரிஞ்சது. சமைக்க கத்துக்குங்க. அந்த ஊர் சமையல் எல்லாம் உங்களுக்குப் பிடிக்காது. சமையல் புத்தகமும் நான் வாங்கிட்டு வர்றேன்."

வலிய வரவழைத்த உற்சாகத்தை அவன் முன் கொட்டினாள்.

"சரி... சக்தி! உடம்பை நல்லா பார்த்துக்க! டாக்டர்கிட்ட தவறாம 'செக்கப்'புக்கு போகணும். நான் பக்கத்துல இல்லேன்னு மெத்தனமாக இருந்துடாதே!"

"குழந்தையாச்சே... கவனமா பார்த்துப்பேன்!"

"ஆபீசுக்கு வாகனத்துல போறது... இந்த நேரத்துல ச[illegible] வராது. அதனால மொத்தமா லீவு போட்டுடு! குழந்தைக்[illegible] ரெண்டு வயசாகற வரைக்கும் உன்னோட அரவணைப்பு அதுக்[illegible]



அவசியம்."

"இதுக்கு பேரு மொத்தமான லீவு இல்லீங்க. ராஜினாமா கடிதமே குடுத்துடலாம். இந்த விஷயத்தை எல்லாம் நான் பார்த்துக்கறேன். ஆனா, நான் உங்ககிட்ட ஒரே ஒரு கோரிக்கைதான் வைக்கப் போறேன்."

"என்ன சக்தி?"

"என்ன சம்பளம் அங்கே?"

"எழுபதாயிரம்... ஏன் கேட்கறே?"

"உங்க செலவுப் போக அம்பதாயிரம் அனுப்புவீங்க இல்லே?"

"ஆமா... சக்தி... அதுக்குத்தான் அம்மாவைக்கூட 'பாங்க்'ல கணக்கு தொடங்கச் சொன்னேன்."

"வேணாங்க... அந்தப் பணத்தை என் 'அக்கவுண்ட்'டுக்கு அனுப்புங்க! வீட்டுக்குத் தேவையானதை நானே பார்த்துக்கறேன்."

"அது... வந்து... அம்மா..."

"அவங்களை நான் சமாளிச்சுக்கறேன். காரணமாதான் சொல்றேன். ஏன்... உங்க வருமானத்தை என்கிட்ட தரக்கூடாதா? வாங்க எனக்கு உரிமைதான் இல்லையா?"

"ஐய்யோ... அதெல்லாமில்லே... அப்படியே செய்துடலாம்!" என்ற தருணுக்கு, சக்தி வித்தியாசமாய் தெரிந்தாள்.

இதற்கு முன் அவளை இப்படிப் பார்த்ததே இல்லை அவன்!

## 13

தருண் விமானத்தில் ஏறும் வரை அவனுள் நெருஞ்சி முள்ளால் குத்தியது, சக்தியின் உற்சாகம்தான்!

'நான் என்னதான் ஆறுதல் சொன்னாலும்... அழுது, களை இழந்து, கவலை அப்பி இருக்க வேண்டாமா? கல்யாணமாகி முழுதாய் நான்கு மாதம்கூட ஆகவில்லை. என்னைப் பிரிய

எப்படி மனம் வரும்? எனக்கு அல்லவா தைரியம் சொல்கிறாள்? போதாதற்கு என் சம்பளம் அவள் கைக்கு போக வேண்டும் என்று ஆசைப்படுகிறாள். என்னிடம் அவளுக்கு தேவை பணம் மட்டும்தானா?'

அந்த வீட்டில் சக்தி உட்பட எல்லோருமே சந்தோஷமாய் வழி அனுப்பியது... வலித்தது.

'மற்றவர்களை விட்டுத் தள்ளலாம். சக்தி கூடவா?'

புறப்பட்ட அன்றுகூட அவள் கன்னத்தில் முத்தமிட்டானே தவிர, கட்டி அணைக்கக்கூட மனசு வழி விடவில்லை. ஆர்வமாய் அதை எதிர்பார்த்த சக்தி... தானே மூர்க்கமாய் அணைத்து அழுகையை விழுங்கிச் சிரித்தாள்.

"வாழ்த்துகள் தருண்! தினமும் கம்ப்யூட்டர்ல என்னோடு 'சாட்' பண்ணுங்க."

"எனக்கு அது பிடிக்காது சக்தி! போன்ல பேசிப்போம்... சரியா?"

"ம்... சரி!" என்றாள் ஏமாற்றமாய்.

விமானம் விண்ணில் பறந்தது.

எல்லாவற்றையும் மீறி தருணுக்கு, தன் மனைவியை ஐந்து ஆண்டுகள் பிரிந்திருக்கப் போகிறோம் என்ற எண்ணம் கண்களில் நீர் கோர்க்க வைத்தது.

மீனாட்சிக்கு ஏற்கெனவே சக்தி சம்பளத்தைத் தராததில் கடுப்பு. இதில் அவள் உற்சாகமாய் வளைய வந்ததும், தருண் சம்பளத்தையும் அவளுக்கே அனுப்பச் சொன்னதும், ஆத்திரம் மண்டையைப் பிளந்தது.

அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிவிட, மீனாட்சி ஒன்றும் முட்டாள் இல்லை.

ஆடுகிற மாட்டை ஆடித்தானே கறக்கணும்?

அமைதியாய் மருமகளை அவள் போக்கிலேயே விட்டாள்.

ஆனால், தருண் பறந்துச் சென்ற அடுத்தக் கணமே நெஞ்சுக்குள் பாறாங்கல் அமர்ந்ததைப் போல் அவதி! திருமணமாகி நான்கு மாதம்தான் ஆகி இருந்தாலும், கணவன் மீது அவ்வளவு காதலாக



இருந்தாள்.

ஆரம்பத்தில் சில பொய்களைச் சொன்ன காரணத்தால் வருந்தியது உண்டு. ஆனால், அந்த வீட்டுக்கு வந்த ஓரிரு நாட்களிலேயே மீனாட்சியைப் பற்றி முழுமையாய் புரிந்துகொண்டாள்.

வடிகட்டின சுயநலத்தனம். வீட்டின் நிலைமைப் புரியாமல் செலவு செய்யும் முட்டாள்தனம். தன் பெண்கள் எதைக் கேட்டாலும் யோசிக்காமல், மரியாதைக்கு ரெண்டு வார்த்தை திட்டிவிட்டு வாங்கித் தரும் படாடோபம்! மாமனாரின் பொறுப்பற்ற தன்மை!

அதனால்தான் சக்தி, எதைப் பற்றியும் கவலைப்படாமல் சில முடிவுகளை எடுத்தாள். அதில் தன் கணவனின் நிம்மதியும், சந்தோஷமும் அடங்கி இருந்தது.

விமான நிலையத்தில் இருந்து நேரே தன் அம்மா வீட்டுக்கு சென்றாள் சக்தி.

விடுமுறை நாள் ஆதலால், அப்பா வீட்டில் இருந்தார். பக்கத்தில் அம்மா.

இருவருக்கும் எல்லா விபரமும் தெரியும். அதனால் மாப்பிள்ளை வீட்டார் மீது கோபமாய் இருந்தனர். மகளைப் பார்க்க ஓரிரு முறை மட்டுமே சம்பந்தி வீட்டுக்கு வந்து சென்றனர்.

ஆனால், தருணின் பல நல்ல குணங்களை மகள் மூலம் அறிந்து தங்களைத் தேற்றிக்கொண்டனர்.

"அட.... சக்தி... வாம்மா... வா... வா! கல்யாணி... சக்தி வந்திருக்கா பாரு!"

உற்சாகமாய் வரவேற்றார் கைலாசம்.

"சக்தி... வாடா... வா செல்லம்! 'செக்கப்'புக்கு போயிட்டு வந்தியா! டாக்டர் என்ன சொன்னார்?"

"ரெண்டு நாள் கழிச்சுப் போகணும். உன்கூடதாம்மா போகப் போறேன்!"

"அதுக்கென்ன? தாராளமாப் போகலாம். முருங்கை அடை போட்டுட்டிருக்கேன். உட்காரு. சூடா எடுத்துட்டு வர்றேன்."

"மாப்பிள்ளை எப்பம்மா வெளிநாடு போறார்?"

"அவரை அனுப்பிட்டுதாம்மா வர்றேன்."

"என்னம்மா சொல்றே? எங்ககிட்ட ஏன் சொல்லலே? வழியனுப்ப வந்திருப்போமே? அதானே மரியாதை? மாப்பிள்ளையும், அவங்க வீட்லேயும் என்ன நினைப்பாங்க?"

"சொல்லணும்னு தோணலேப்பா! அவரை அஞ்சு ஆண்டுகளாய் பிரிஞ்சி இருக்கணும்னு நினைக்கறப்ப, தாங்க முடியலைப்பா! அவருக்கும் அதே வேதனைதான். யார்கிட்டேயும் சொல்லிக்கலே!" என்றவள்,

பேசிக்கொண்டு இருக்கும்போதே விசும்பி அழ ஆரம்பித்தாள்.

"சக்தி... சக்தி... என்னம்மா... என்னாச்சு? ஏன் அழறே?" கைலாசம் பதறி எழுந்து மகள் அருகில் சென்றார்.

அப்போது கல்யாணியும் வந்துவிட, முகம் மாறியது.

"என்னாச்சுங்க... சக்தி ஏன் அழறா?"

"தெரியலே... சொல்லு சக்தி! ஏதாவது பிரச்சினையா?"

"கஷ்டமா இருக்குப்பா! அவரைப் பிரிஞ்சி அஞ்சு ஆண்டுகளாய் தனியா எப்படி இருப்பேன்? என்னைச் சுத்தி நிறைய ஜனம் இருக்கணும்னுதானே கூட்டுக் குடும்பத்துக்கு ஆசைப்பட்டேன்! இப்ப அவரும் இல்லாம..."

வெடித்துப் புறப்பட்டது அழுகை.

"உன் வேதனை புரியுது! நம்மோட விருப்பங்கள் சில நேரம் அர்த்தமில்லாமப் போறது உண்டு. இதுல உன் தப்பு எதுவுமில்லே சக்தி. நம்மை நாமே தேத்திக்கறதைத் தவிர வேற வழியும் இல்லே! குறைகள் பல இருந்தாலும், அந்த குடும்பத்தல இருக்கிறவங்கதான் உனது உறவுகள்.

உன் வயித்துல இருக்கிற குழந்தைய நினைச்சிப் பார்! அந்த உயிருக்காக உன்னை நீ சந்தோஷமா வச்சிருக்கிறது அவசியம். அடிக்கடி நம்ம வீட்டுக்கு வந்து– போயிட்டு இரு! சுமாரா இருந்தாலும், உன் அம்மா சமையல சாப்பிடு... நிம்மதியா



இருக்கும்!"

அப்பாவின் கடைசி வார்த்தைக்கு, அழுகை மறைந்து சிரிக்க முற்பட, நிம்மதியான கல்யாணி, "அதானே பார்த்தேன். என்னடா, பொண்ணு வந்து கால் மணி நேரமாச்சே... இன்னும் பொண்டாட்டி காலை வாரி விடலையேன்னு..." என்று பொய்யாய் கோபப்பட்டாள்.

மகளின் மனப்பாரம் கொஞ்சம் இறங்கிற்று!

★★★

அந்த வீட்டின் சூழ்நிலை சக்திக்கு திருப்தியாய் இல்லை.

அவளிடம் யாரும் இயல்பாய் பேசுவதில்லை.

மீனாட்சி, சதா நேரமும் எதையோ முணுமுணுத்தபடி– யாரையோ திட்டிக்கொண்டு இருப்பாள். இவளைப் பார்த்ததும், 'என்னம்மா வேணும்... காப்பியா, டீயா? ராத்திரிக்கு டிபனா, சாப்பாடா? டிபன்னா எது செய்யட்டும்?' என்று அதீத பவ்வியத்தோடு கேட்கும்போது, அதில் கேலியும் ஒளிந்திருந்தது புலப்பட்டது.

ரேகா, ராகினியின் நடவடிக்கையிலும்கூட ஒருவித எகத்தாளம் தென்பட்டது.

சக்திக்கு புரிந்தது.

எல்லாவற்றுக்கும் காரணம் பணம்!

'அஞ்சு ஆண்டுகள் சமாளித்தாக வேண்டுமே!'

நாட்கள் வேகமாய் நகர்ந்தன.

சக்தி வேலைக்கு போய்க்கொண்டிருந்தாள்.

வாரத்தில் இரண்டு நாட்கள் அம்மா வீட்டுக்குச் செல்வாள்.

தருண், சக்தியின் வங்கிக் கணக்குக்கே பணம் அனுப்பினான். அதில், குடும்பத் தேவைக்கு போதுமானதை எடுத்து மாமியாரிடம் தருவாள்.

"ஏம்மா சக்தி... இப்படி அளந்து குடுத்தா எப்படி? மாசாமாசம் விலையேத்தறாங்க. என்னன்னு சொல்றது? எப்படி குடும்பம் நடத்தறது? என், பிள்ளை அனுப்பினதை என்கிட்ட குடு!

செலவுகள் போக பத்திரம் பண்றேன்!" என்றாள் மீனாட்சி.

"அது பத்திரமா 'பேங்க்'லயே இருக்கட்டுமே! இந்த பணத்திலேயே கட்டு செட்டா குடும்பம் நடத்தி மிச்சப்படுத்த திறமையும் உங்ககிட்ட இருக்கு!" என்றபோது, வாயடைத்து போனாள் மாமியார்.

தருண் தினமும் இவளிடம் போனில் பேசுவான். அம்மாவிடமு பேசுவான்.

முன்புபோல் ரேகாவும், ராகினியும் அம்மாவிடம் இஷ்டம்போல பணம் வாங்க முடியவில்லை. கைபேசிக்கு 'ரீ சார்ஜ்' பண்ணக்கூட சிரமப்பட வேண்டியதாயிற்று.

"என்னம்மா அநியாயம் இது? 'நாப்கின்' வாங்கக்கூட நாங்க அண்ணியோட கையை எதிர்பார்க்கணுமா?"– ரேகா.

"என்னை ஏன்டி கேக்கறீங்க? உங்க அண்ணன் பேசுவான்ல அப்ப அவனையே கேளுங்க!"

"நீ சரியில்லம்மா! இந்த வீட்ல நீ மாமியாரா? அந்த அம்மா மாமியாரான்னு புரியல! என்ன நடக்கப் போவுதோ?"

– கொளுத்திப் போட்டாள் ராகினி.

மீனாட்சியின் உள்ளம் பற்றி எரிந்தது.

ஏதாவதொரு சந்தர்ப்பம் வாய்க்காதா? என்று ஏங்கினாள்.

சக்தி எதைப் பற்றியும் கவலைப்படாமல் தன் பணிகளில் கவனம் செலுத்தினாள்.

ஒன்பதாவது மாதம் அலுவலகத்தில் நீண்ட விடுப்பு எடுத்துக்கொண்டு அம்மா வீட்டில் தங்கினாள்.

பத்தாவது நாளில் அழகான பெண் குழந்தை பிறந்தது.

'பொண்ணுதானா பிறக்கணும்?' என்று அங்கலாய்த்தாள் மீனாட்சி.

ஐந்து மாதம் வரை பிறந்த வீட்டில் இருந்துவிட்டு, புகுந்த வீட்டுக்கு வந்தாள்.

குழந்தையை மாமியாரிடம் விட்டுவிட்டு, மறுபடி அலுவலகம் செல்ல ஆரம்பித்தாள்.



# 14

"இப்பதான் வந்த மாதிரி இருக்கு. ஆனா, நம்ம ஊரைவிட்டு கிளம்பி ஒரு ஆண்டு ஓடிப் போயிடுச்சுன்னா, நம்பவே முடியலை சக்தி! மலைப்பா இருக்கு. உன்னைப் பார்க்காம ஏங்கிப் போயிருக்கேன் செல்லம்!"

போனில் காதலாய் குழைந்தான் தருண்.

கண் மூடி அவன் பேச்சில் லயித்தவள்,

"எனக்கும்தான் தருண்! கடைசியா... கிளம்பறப்ப நீங்க கழட்டிப் போட்டுட்டுப் போன சட்டையைத்தான் தினமும் கட்டிப் பிடிச்சிக்கிட்டு படுத்துக்கறேன் தெரியுமா?"

"ஏய்... நிஜமாவா?"

தாபமாய் கேட்டான்.

"ம்..."

"என்னப் பண்றதுடா? இப்படியே நாள் சீக்கிரம் ஓடிப் போயிடாதான்னு இருக்கு. சரி... நம்ம குழந்தை அவந்திக் குட்டி எப்படி இருக்கா?"

"அவளுக்கென்ன? ஜம்முன்னு இருக்கா. அப்படியே உங்க சாயல்தான். 'போட்டோ' அனுப்பினேனே... பார்க்கலையா?"

"பார்த்தேன்டா... எனக்கென்னமோ கண்ணும், மூக்கும் உன்னை மாதிரிதான் இருக்குன்னு தோணுது!"

"என் மேல் உள்ள காதல் மயக்கம்... அதனால அப்படித்தான் தெரியும்."

"அதென்னமோ நிஜம்தான்! இங்கேகூட எந்தப் பொண்ணைப் பார்த்தாலும் உன்னை மாதிரியே தெரியுது."

"அது ரொம்ப தப்பாச்சே மச்சான்."

"ச்சீ... நீ அந்த அர்த்தத்துல சொல்றியா? ஆமா, கேக்கணும்னு நினைச்சேன். குழந்தைக்கு ஐந்து மாசம்தான் ஆகுது. அதுக்குள்ளே ஏன் மறுபடி ஆபீசுக்கு போறே?"

"நிறைய காரணம் இருக்கு தருண்! சும்மா இருந்தா உங்
ஞாபகம் வந்து கஷ்டப்படுத்துது. நம்ம குழந்தைக்காக சம்பாதித்தா
வேண்டும். அவளுக்காகன்னு சொல்லிக்கிட்டு நீங்க மறுபடி
வெளிநாடு ஓடக்கூடாதில்லே?"

"தாமதமான திருமணம், அழகான பொண்டாட்டி, மோசமான
வீட்டு சூழ்நிலை, திடீர் பிரம்மசாரிய வாழ்க்கை! கடவுள் ஏன் சக்தி
என்னை இப்படி படுத்தணும்?"

"வேற வழி? பொறுத்துத்தான் ஆகணும். மனசைத் தள
விடாதீங்க. இன்னும் நாலு ஆண்டுதானே? எல்லாத்துக்கும்
சேர்த்து வச்சு வாழ்ந்துடலாம்."

இப்படியே போனில் காதலை வளர்த்தார்கள். தங்களை
தாங்களே தேற்றிக்கொண்டார்கள்.

நாட்கள் இன்னும் வேகமாக நகர்ந்தன.

அன்று... சக்தி வேலைக்குச் செல்வதற்காக இருசக்கர
வாகனத்தை எடுத்தபோது... எதிர்ப் பக்கம் 'பைக்' உதைக்கும்
சத்தம் கேட்டது.

எதேச்சையாக பார்த்த சக்தி, கண்களைச் சுருக்கினாள்.

'அது... தயாதானே? ஆமாம்... அவனேதான்! இங்கே
எப்படி?'

சட்டென வண்டியைக் கிளப்பி அவன் முன் நிறுத்தினாள்.

"ஹலோ தயா!"

நிமிர்ந்தவன், நம்ப முடியாமல் கண்களை விரித்தான்.

"ஹேய்... சக்...தி! நீ எப்படி இங்கே?"

"அதுசரி... நான் கேக்க வேண்டிய கேள்வி இது? இதோ...
இதுதான் என் மாமியார் வீடு!"

"ஏய்... சொல்லவே இல்லே... கல்யாணம் ஆகிடுச்சா?"

"குழந்தையும் உண்டு. உன் முகவரி தெரியலே! செல்பேசி நம்பரும்
தெரியாது. காலேஜ் முடிச்சதும் நீ எங்கே போயிட்டே?"

"சொந்த ஊர்லயே வேலை கிடைச்சது! அது சரிப்படலே
அதான் இப்ப மதுரையில் இருந்து சென்னைக்கு வந்துட்டேன்



'கார்ப்பரேட் கம்பெனி'யில நல்ல வேலை கிடைச்சிருக்கு. ஆனா,
'பேச்சுலரு'க்கு இங்கே வீடு கிடைக்கறது ரொம்ப கஷ்டமா இருக்கு!
இதோ... இந்த மாடி வீட்ல இடம் கிடைச்சது. ரெண்டு அறை.
திருப்தியா இருக்கு!"

"அட... எதிர் வீட்டிலேயே குடி வந்துட்டியா? நிம்மதி. பேச்சுத்
துணைக்கு ஆள் கிடைச்சாச்சு. வாயேன் வீட்டுக்கு!"

"நேரமாயிடுச்சு சக்தி..."

"எனக்கும்தான்...! சும்மா சம்பிரதாயத்துக்கு கூப்பிட்டேன்.
இங்கேதானே இருக்கப் போறே.... மெல்லவே வா...!"

"அதே குறும்புப் பேச்சு... நீ மாறவே இல்லை. கணவர் என்ன
பண்றார்?"

இருவரும் வண்டியை ஓட்டியபடி பேசிக்கொண்டே போக...

அத்தனையையும் வராந்தாவில் இருந்து பார்த்துக்கொண்டிருந்த
மீனாட்சிக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

★★★

தயா... அதே தெருவில் குடிவந்ததில் இருந்து சக்திக்கு நேரமே
போதவில்லை.

அலுவலகம் முடிந்து வந்ததும், தயாவுக்கு அவந்திகாவைப்
பார்த்தாகணும். குழந்தையோடு கொஞ்சியபடி, சக்தியிடம்
பேசிக்கொண்டு அல்லது சதுரங்கம் ஆடிக்கொண்டு பொழுதுகள்
நகர்ந்தன.

சில வேளை தயாவுக்கு இரவு உணவும் அங்கேயே!

அவர்களின் சிரிப்பும், பேச்சும் வீட்டில் இருந்தவர்களின்
கண்களை உறுத்தின. மகனின் வருமானம் அத்தனையும் சக்தியிடம்
என்பதால், அவசரப்பட்டு வாயைத் திறக்க விரும்பவில்லை
மீனாட்சி.

அன்று அலுவலகத்தில் இருந்து வீட்டுக்கு வந்த சக்தி பதற்றமாய்
இருந்தாள்.

கைபேசியில் தயாவிடம், "இன்றைக்கு வீட்டுக்கு வர வேண்டாம்"
என்றாள்.

"அத்தே... ராகினி எங்கே... அவ வந்துட்டாளா?"

"வந்துட்டாளே... நான்தான் கோதுமை மாவு வாங்க கடைக்கு அனுப்பி இருக்கேன். ஏன் கேக்கறே?"

"அவ வரட்டும்... சொல்றேன்! அவந்திக்கு சத்து மாவு கொடுத்துட்டீங்களா?"

"அது கொடுத்து ஒரு மணி நேரமாயிடுச்சு! இப்ப பாலைக் கொடு!"

குழந்தைக்கு பால் புகட்டிவிட்டு நிமிர்ந்தபோது, ஏதோ ஒரு சினிமாப் பாடலை 'ஹம்' செய்தபடி உள்ளே நுழைந்தாள் ராகினி.

"ராகினி!"

"என்ன அண்ணி?"

கோதுமை மாவை அம்மாவிடம் கொடுத்துவிட்டு, சக்தியிடம் வந்தவள், குழந்தையை வாங்க கையை நீட்டினாள்.

"இருக்கட்டும்... அத்தை, குழந்தையைப் பிடியுங்க!"

ராகினி முகம் மாறினாள்.

"சொல்லு ராகினி... யாரவன்?"

"எ... என்ன... யாரு... யாரைக் கேக்கறீங்க?"

"என்ன சொல்றே சக்தி?"– குழந்தையை வாங்கிய மீனாட்சி, மிரண்டு போய் கேட்டாள்.

"அதை உங்கப் பொண்ணே சொல்வா! சொல்லு ராகினி!"

"சொல்லு... சொல்லுன்னு அம்மா சொன்னா... என்னை சொல்லச் சொல்றீங்க? தலையும் புரியல... வாலும் புரியல..."

அவள் கோபமாய் கத்த, சக்திக்கு ஆத்திரம் தலைக்கு ஏறியது.

பளார் என ஒரு அறைவிட்டாள்.

"ஏய்... சக்தி... என்ன பண்றே?"

பதறினாள் மீனாட்சி.

அடியின் வலியில் ஸ்தம்பித்து நின்றிருந்தாள் ராகினி.

நடந்த சம்பவத்தைப் பார்த்து அதிர்ந்துப் போயிருந்தாள் ரேகா.

"என்ன நினைச்சிட்டு இருக்கிங்க? என்னை அடிக்க எவ்வளவு தைரியம் உங்களுக்கு?"

கண்ணீர் வழிய ஆவேசமானாள்.

"வகுப்புக்கு 'கட்' அடிச்சிட்டு, சுதா லாட்ஜ்ல மோசமான ஒருத்தனோடு சேர்ந்து அறை எடுத்துத் தங்கி ஜாலியா இருந்துட்டு வர்றவளை அடிக்க தைரியம் தேவையில்லே!"

ராகினி ஓரடி பின் நகர, பெற்றவளும்– சகோதரியும் விக்கித்துப் போயினர்.

"எ...ன்...ன?"

"ஆமா அத்தை! ஆபீஸ் வேலையா தேனாம்பேட்டையில் சுதா ஓட்டல்ல இருந்த 'கிளையண்ட்'டைப் பார்க்க என்கூட பணிபுரிகிற வர்ஷினியோடு போய் இருந்தேன். அது 'லாட்ஜ்' வசதியோட இருந்த ஓட்டல். வரவேற்பறையில் சாவியைக் கொடுத்துட்டு, அவனோடு வெளியே போனா இவ! அங்கேயே இவளை விசாரிக்க முடியாத சூழ்நிலை.

'ரூம் பாயை' விசாரிச்சேன். உண்மைத் தெரிஞ்சது. இவகூட வந்தவன் யார் தெரியுமா? சுந்தர்னு பேரு! கஞ்சா விற்கிறவன் மட்டுமில்லே... அந்தப் பழக்கமும் உள்ளவன். ரெண்டு கொலை வழக்கு இருக்கு. ஒன்பது வயது சின்னப் பொண்ணை கற்பழிச்சதுக்காக ஜெயிலுக்குப் போயிட்டு வந்தவன்தான் உங்க பொண்ணு காதலிக்கிற ஆளு!"

"அடிப்பாவி... என் தலையில மண்ணை அள்ளிப் போட்டுட்டியே! நம்பினேனே... கழுத்தை அறுத்துட்டியே..."

மீனாட்சி, மகளை சரமாரியாக அடித்தாள்.

சக்தி தடுக்கவில்லை.

ரேகா பரபரத்தாள். அம்மாவைத் தடுத்தாள்.

அடி, அவமானம், வேதனை எல்லாமாக சேர்ந்து ராகினிக்கு, சக்தி மேல் வன்மமாக உருவெடுத்தது.



களேபரம் அடங்கிய பின், சக்தி பேச ஆரம்பித்தாள்.

"பாருங்க அத்தை! நான் இவளை அடிச்சது தப்புன்னு நீங்க நினைச்சாக்கூட அதைப் பத்தி கவலைப்படலே! பொண்டாட்டி, பிள்ளையைப் பிரிஞ்சி யாருக்காக கஷ்டப்படுறார் என் புருஷன்? இவங்களுக்காகத்தானே? ஆனா, அவர் கஷ்டத்தை யார் உணர்றீங்க? இவ செஞ்சது மகா தப்பு. அவனோ மோசமான பொறுக்கி. விஷயம் தெரிஞ்சா, உங்க பிள்ளை உடனே கிளம்பி இங்கே வந்துடுவார். இதெல்லாம் நமக்குள்ளே இருக்கட்டும். இனி இவ காலேஜுக்கு போகக்கூடாது."

"...........?"

அத்தனைப் பேரும் திடுக்கிட்டனர்.

"கல்யாணம் ஆகற வரை உங்க பொண்ணை பத்திரமா பார்த்துக்குங்க. மூடி மறைச்சுதான் ஒருத்தன் தலையில கட்டணும். அந்தப் பாவத்தை செஞ்சுதான் ஆகணும். மீறி இவ அந்தப் பையனோடு பேசினா... ஒரு ரூபாய்கூட இவளுக்கு கிடைக்காது!"

தெளிவாய்– சற்றே கோபமாய் பேசிவிட்டு உள்ளே போனவளைப் பார்த்து ஆடிப் போனார்கள் மீனாட்சியும், ராகினியும்!

## 15

ராகினியின் படிப்பு நிறுத்தப்பட்டது. வீட்டிலேயே முடக்கப்பட்டாள்.

ஏழுமலைக்கு காரணம் வேறுவிதமாகச் சொல்லப்பட்டது. 'உடன் படித்தவளின் தம்பியிடம் பேசியதற்கு சக்தி சந்தேகப்பட்டு, இவளோட படிப்பை நிறுத்திவிட்டாள்' என்று!

மருமகள் மீது எழுந்த புதிய வெறுப்புக்காக 'சேர்த்து' குடித்தார் ஏழுமலை.

ஆரம்பத்தில் மகள் மீது மீனாட்சிக்கும் கோபம்

இருந்ததென்னவோ உண்மைதான்!

ஆனால், அதற்காக அவளை கைநீட்டி அடித்ததும்.. படிப்பை நிறுத்தியதும் நாளடைவில் உறுத்தியது. சுந்தர், கஞ்சா விற்பது மட்டும்தான் ராகினிக்குத் தெரியும். மற்ற கொடூரக் குற்றங்களை அறிந்ததும், முழுக்கவே அவனை மனதில் இருந்து தூக்கி எறிந்தாள்.

மகளின் வருத்தம் தோய்ந்த முகம், மீனாட்சியை கண்ணீர் வழிய வைத்தது.

தயா- சக்தியின் நட்பு, இவர்களின் மனதுக்குள் தி மூட்டியது.

'மருமகளை சும்மாவிடக்கூடாது' என்ற வன்மம் உள்ளத்தை முட்புதராக்கியது.

சக்தியைப் பற்றி தவறாக கணித்தவற்றை மகனிடம் போனில் சொல்லத் தொடங்கினாள்.

அங்கே... தருண், நிலைகொள்ளாமல் தவித்தான்.

★★★

முற்றிலும் மாறுபட்ட, அன்பற்ற மனிதர்கள் மத்தியில் தனியே இருப்பது போன்ற அவஸ்தை சக்திக்கு!

அதில் தயாவின் நட்பு மட்டுமே சிறு ஆறுதல். தருணும் முன்பு போல அடிக்கடி போனில் பேசுவதில்லை. பேசினாலும் அதில் இயந்திரத்தனம்.

நாட்கள் வேகமாக கரைந்தன.

இரண்டரை வயது அவந்திகாவுக்கு நல்ல காய்ச்சல். அலுவலகத்துக்கு விடுப்பு போட்டுவிட்டு, குழந்தையை கவனித்துக்கொண்டாள்.

தயா, சக்தியைப் பார்க்க வீட்டுக்கு வரும்போதெல்லாம், யாரையோ திட்டுவது போல் மீனாட்சி திட்ட.... புரிந்து ஒதுங்கினான்.

சக்திக்கும் வருத்தமாகத்தான் இருந்தது.



அதே நேரம், தான் அதிக உரிமை எடுத்து- தயாவை ரவழைத்துப் பேசுவது- அந்த வீட்டு சூழ்நிலைக்கு கோபத்தை ண்டாக்கும் என்று புரிந்ததால் எளிதாக எடுத்துக்கொள்ள யன்றாள்.

நள்ளிரவு! அவந்திகாவுக்கு அதிக காய்ச்சலால் வலிப்பு வர, யந்து மாமியாரை அழைத்தாள்.

அவளோ ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

குரல் கேட்டு யாரும் எந்திரிக்கவில்லை.

உடனே தயாவுக்கு போன் பண்ண, சில நொடிகளில் பைக்'கோடு வாசலில் வந்து நின்றான்.

★★★

இரவெல்லாம் கண் விழித்து தூக்கம் தொலைத்த விழிகளும், கலைந்த தலையும், களைப்புற்ற முகமுமாய் குழந்தையுடன் 'பைக்'கில் இருந்து இறங்கியவளை வீடே முகச் சுளிப்போடு பார்த்தது.

"பத்திரமா பார்த்துக்க சக்தி! அவசரம்னா கூப்பிடு!"- சொல்லிவிட்டு தயா போய்விட்டான்.

"இரவெல்லாம் வீட்ல இல்லே போல... எங்கே போயிட்டு வர்றே?" என்றாள் மீனாட்சி.

இவள் விபரம் சொன்னாள்.

"வீட்ல இத்தனை பேர் இருக்கோம்... எங்களை ஏன் எழுப்பலே?"

"கூப்பிட்டேன்... எந்திரிக்கலே..."

"இதென்னம்மா பெருங்கதையா இருக்கு? செத்தாப் போயிட்டோம்? மறுபடி மறுபடி கூப்பிட்டா எந்திரிக்கப் போறோம். மெனக்கெட்டு அவனை எழுப்பி, அவனோட போயிருக்கே?!"

"எனக்கு பிள்ளையோட உயிர்தான் முக்கியம். எல்லாத்துக்கும் ஒரு காரணத்தைக் கண்டுபிடிச்சிட்டு இருக்காதீங்க!"

முறைத்துவிட்டு குழந்தையோடு உள்ளே சென்றுவிட்டாள்.

மூன்று முறை போன் பண்ணியும் தருண் எடுக்கவில்லை.

இப்போதெல்லாம் வாரத்தில் ஒரு முறை பேசுவதே அபூர்வம்.

அதிலும், குழந்தையைப் பற்றிய விசாரிப்பு மட்டுமே! பழைய காதலோ, கொஞ்சலோ... கிஞ்சிற்றும் இல்லை பேச்சில்.

இவளாக போன் பண்ணினாலும், "பிஸியாய் இருக்கேன்" என்ற வார்த்தைகளோடு, இவள் பேசுவதைக் கேட்க பொறுமையின்றி வைத்துவிடுவான்.

சக்திக்கு குழப்பமாய் இருக்கும். எனினும், 'அங்கு என்ன பிரச்சினையோ?' என்று சமாதானப்படுத்திக்கொள்வாள்.

நான்காவது முறை– மறுபடி அழைத்தாள்.

எடுத்தான்.

"என்ன சொல்லு?" என்றான், இயந்திரம் மாதிரி.

"மூணு முறை போன் பண்ணினேன்... எடுக்கவே இல்லை."

"அதான் எடுத்துட்டேனே! என்னன்னு சொல்லு?"

ரேகாவுக்கு தான் மாப்பிள்ளை பார்த்ததையும், அத்தை மறுத்ததையும் சொன்னாள்.

"அதிலே என்ன தப்பு இருக்கு? எங்க வீட்ல, சாதி விட்டு சாதி பண்றதில்லே! உனக்கேன் அதிகப் பிரசங்கித்தனம் சக்தி? நான் இந்தியா வந்த பிறகு, என் தங்கச்சிகளுக்கு கல்யாணம் பண்ணலாம். அனுப்புற பணமெல்லாம் பத்திரமா இருக்குத்தானே?"

அவன் பேசிய விதம், ஒட்டாத வார்த்தைகள்– மனதை இறுக்கிப் பிழிந்தன.

"இருக்குங்க" என்றாள்.

"..........."

"சரி... வெச்சிடுறேன்!"

துண்டித்தான்.

அம்மாவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது.

உடனே அலுவலகத்தில் 'பர்மிஷன்' போட்டுவிட்டுச் சென்றாள்.

"என்னம்மா சமைச்சே... பசிக்குது!"

"உனக்குப் பிடிக்காதே சக்தி! ராகி சேவை பண்ணினேன்!"

"கொடும்மா!"

ஆசை தீரச் சாப்பிட்டாள்.

அமிர்தமாய் தெரிந்தது.

"தூங்கணும் போல் இருக்கு... உன் மடியில படுத்துக்கட்டுமா?"

"வாடா!"

பாசமாய் தலையைத் தடவிக் கொடுத்தாள்.

இவளுக்கு கண்ணீர், வெள்ளமாய் உற்பத்தியானது.

அம்மாவுக்குத் தெரியாமல் துடைத்துக்கொண்டாள்.

தருண் அப்படி பேசியது புதிதாய்– புதிராய் இருந்தது.

அவன் சம்பாத்தியம் மட்டுமல்ல, அவளுடைய வருமானமும் இன்று எப்படியெல்லாம் உருப்பெற்று இருக்கின்றன என்பது யாருக்கும் தெரியாது... சக்தியைத் தவிர!

## 16

ஆண்டுகள் கடந்தன.

தயா திருமணமாகி வேறு இடம் குடிப் பெயர்ந்துவிட்டான்.

அவந்திகா இப்போது 'எல்.கே.ஜி.' படிக்கிறாள்.

சக்தி தன் பிறந்த வீட்டில் மட்டும்தான் பேச வாய் திறக்க முடிகிறது.

இங்கு புகுந்தகத்தில்... உறவுகளுக்குள் கோபதாபங்களும், சந்தேகங்களும் துவேஷத்தை உண்டு பண்ணி... இவளிடம் யாரும் விரும்பிப் பேசுவதில்லை.

சக்தி தன் கணவனின் வருகைக்காக காத்திருக்கிறாள்.

அப்போது அவன் மட்டுமல்ல... உறவுகளும் இவள் செய்திருக்கி சில விஷயங்களால் வாயடைத்துப் போவதோடு, தலை குனிந்து நிற்பார்கள்.

அதுவரை எதற்காகவும் வருத்தப்படக்கூடாது என்பதி உறுதியாக இருந்தாள்.

குழந்தையைப் பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டு, அப்படியே அலுவலகம் புறப்பட்டுவிடுவாள்.

மாலையில், மீனாட்சி அழைத்து வருவாள்.

வீட்டுப்பாடம், பூங்காவுக்கு அழைத்துச் சென்று வருவதென்று சக்தி தன் நேரங்களை மகளுக்காகச் செலவழித்தாள்.

கைலாசம் 'பைக்' விபத்தில் இறந்து போகிறார்.

துடிதுடித்துப் போன சக்தி... துணையை இழந்து தவித்த தன் அம்மாவைத் தேற்றக்கூட திராணியின்றி அழுது தீர்த்தாள்.

இந்த உலகத்தில் அவளை நன்றாகப் புரிந்துகொண்ட ஒரே ஆத்மா! தந்தையாய் இருந்ததைவிட, மகளுக்கு உற்றத் தோழனாய் இருந்தார் என்பதே நிஜம்.

ஊடலும், கூடலுமாய் சிறந்த கணவனாய் மனைவியுடன் வாழ்ந்து காட்டியவர். பாவம், கல்யாணிதான் உணர்வற்ற மரமாய் நின்றாள்.

இப்போது அம்மாவும் ஒரு விதத்தில் குழந்தையைப் போல என்பதால், தினமும் அவளைப் பார்த்துப் பேசிவிட்டு வருவாள். அதனால், கல்யாணிக்குள் சிறு ஆறுதல்.

ஒரு நாள் திடீரென்று நெஞ்சைப் பிடித்து சாய்ந்துவிட்டார் ஏழுமலை.

அவரால் எந்த பிரயோஜனமும் இல்லை என்றாலும் வீடே அலறியது... அழுதது.

மருத்துவமனையில் சேர்ந்தபோது, பெரிய குண்டைத் தூக்கிப் போட்டார்கள்.

'இதயத்தில் இந்த பிரச்சினை, அந்த பிரச்சினை என்று அவர்களுக்கு புரியாத விதத்தில் சொல்லி– உடனே 'பைபாஸ்



ஜரி' பண்ணியாக வேண்டும். பெரிய தொகை செலவாகும் ன்று!'

நெஞ்சு வெடிக்க கைகளைப் பிசைந்து நின்றாள் மீனாட்சி. சக்தி... உடனே ஆபரேஷனுக்கு ஏற்பாடு செய்யச் சொல்லி ணத்தைக் கட்டினாள்.

"பரவாயில்லையே... அப்பாவுக்கு 'ஆபரேஷன்' பண்ண பணம் கொடுக்கக்கூட இந்த அம்மணிக்கு மனசு வருதே?" என்றாள் ஆச்சரியமாய், ரேகா.

"அவ என்ன... அவளோட சொந்தப் பணத்தையா தூக்கிக் கொடுத்திருக்கா? என் புள்ள சம்பாதிச்ச பணத்தைத்தானே ர்றா?"

'ஆபரேஷன்' நல்லபடி முடிந்து கண் விழித்த ஏழுமலை, மருமகளின் நல்ல மனதைப் புரிந்து கண்ணீர்விட்டார்.

அவரும் தன் வீட்டார் பேச்சைக் கேட்டு சக்தியை ந்தேகப்பட்டது மட்டுமின்றி... குடிபோதையை சாக்காக வைத்துக்கொண்டு– யாரையோ திட்டுவதுபோல் கண்டமேனிக்கு திட்டி இருக்கிறார்.

அது மருமகளுக்கு நன்றாகவே புரியும் என்பதும் அவருக்குத் தெரியும். 'அதையெல்லாம் மனதில் வைத்து பழிவாங்காமல் லட்சக்கணக்கில் செலவு செய்து உயிரைக் காப்பாற்றி இருக்காளே!'

அவளைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டார்.

"என்ன மாமா இது?"

அதிர்ச்சியாய் கேட்டாள்.

"எல்லாம் தெரிஞ்சிருந்தும் காப்பாத்தினியேம்மா... உன் மனசு யாருக்கு வரும்?"

"என்னைப் பத்தி எதுவுமே தெரியாததால், வந்த வார்த்தைகள் அவை! நீங்க யாரு? என் புருஷனோட அப்பா. நான் உங்க மருமக. உங்ககிட்டே எனக்கு எவ்வளவு உரிமை இருக்கோ, அந்த அளவு கடமைகளும் இருக்கு. பதற்றமாகாதீங்க. இப்பத்தானே

'ஆபரேஷன்' முடிஞ்சி இருக்கு? இனி மதுபானம் எப்பவுமே கூடாது. மறந்தும் வாய்ல வச்சா... என்ன ஆகும்னு டாக்டரே சொல்லி இருப்பார்..."

"எமனோட வாசலை மிதிச்சிட்டு வந்தவன்ம்மா! சாவுன்னா என்ன என்கிற பயம் இருக்கே... அது எப்பேர்ப்பட்ட ஆசையையும் கொன்னுடும். இனிமேல் மதுவைத் தொடவே மாட்டேன்ம்மா!"

"சரி... ரொம்ப யோசிக்காம நல்லா தூங்குங்க!"

அவள் அகன்ற பிறகுதான் அவருக்கு இன்னும் யோசனை தறிகெட்டு ஓடியது.

அவளின் வாழ்க்கையை எண்ணி கண்ணீர் உருவெடுத்தது.

வீட்டில் நடந்த நிறைய விஷயங்கள், சக்திக்கு தெரிய வாய்ப்பில்லை.

அவள் மேல் உள்ள கோபத்தில் மீனாட்சியும், பெண்கள் இருவரும் தருணிடம் போனில் அவளின் நடத்தையை கேவலமாகச் சித்தரித்து சொல்லிக்கொண்டே இருக்க, அடிக்கிற அடியில் அம்மியும் நகர்ந்தது.

பிறர் குற்றங்களை நம் கண் முன் வைத்து, தம் குற்றங்களை நமது பின்புறம் வைத்துக்கொள்வதுதானே மனிதாபிமானமற்ற மனிதனின் இயல்பு!

ஏழுமலையும் அதைத் தடுக்காமல் வேடிக்கைப் பார்த்தார். ஏனென்றால் சக்தி மீது அவருக்கும் கோபம்.

அவர்கள் சொன்னதுகூட அதிசயமில்லை.

அதை அப்படியே தருண் நம்பியதுதான் அநியாயம்.

ஏழுமலைக்கு தருணைப் பற்றிக் கிடைத்த நம்பகமான தகவல்தான்... அவர் நெஞ்சைப் பிசைந்தது.

'என்ன நடக்குமோ?'

ஆனால், ஒரு நாள் ஏழுமலை, மகனிடம் போனில் மனம்விட்டுப் பேசினார்.

★★★



சக்தி, 'டிரஸ்ஸிங் டேபிள்' கண்ணாடி முன் நின்று பார்த்தாள்.

இந்த ஐந்து ஆண்டுகள்– தன் உடம்பிலோ, முகத்திலோ ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறதா என்று!

உடல் கொஞ்சம் மெலிந்து தெரிந்தாலும், முகத்தின் பொலிவு அப்படியே இருந்தது.

'தருண்... இன்னும் இருபது நாட்கள்! உங்கள் வேலை ஒப்பந்தம் முடிந்து, பறந்து வந்து என்னருகில் நிற்கப் போகிறீர்கள். என் மனசைப் போலவே, எனது உடலையும் அப்படியே மாற்றாமல் வைத்திருக்கிறேன். என்னுடைய தேகத்தை இரு கைகளில் ஏந்தி, என்னையே பார்த்து ஆச்சரியப்படப் போகிறீர்கள்.

இனிதான் நாம் வாழவே ஆரம்பிக்கப் போகிறோம் தருண்! உங்களை சந்தோஷத்தின் எல்லைக்கே அழைத்துச் செல்லப் போகிறேன். ரொம்பவே ஏங்கிப் போய் இருக்கிறேன்.

அப்பப்பா... எத்தனை நாட்கள் நாம் பிரிந்து இருந்திருக்கிறோம்? எல்லாத்தையும் சேர்த்து வாழ்ந்துவிடலாம்!'

ஆசையாய் தன் விரல்களால் கன்னத்தில் கோலம் போட்டாள்.

★★★

"என்ன சக்தி... காலையிலேயே வந்துட்டே? ஆபீசுக்கு போகலே?"

செடிகளுக்கு தண்ணீர் விட்டுக்கொண்டிருந்த கல்யாணி, மகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

"இரண்டு மணி நேரம் 'பர்மிஷன்' போட்டுட்டேன்... போகணும். என்னமோ உன்னைப் பார்க்கணும்னு தோணிச்சு!"

"ஏம்மா... ஏதாவது பிரச்சினையா?"

"பிரச்சினைன்னாத்தான் அம்மாவைத் தேடி வரணுமா? சந்தோஷமா இருக்கேன்ம்மா!"

"அப்படியா?"

புன்னகையில் முகம் அகல, சேலைத் தலைப்பால் கைகளைத்

துடைத்தபடி மகள் அருகில் வந்தமர்ந்தாள்.

"ரொம்ப நாளைக்கப்புறம்... இன்னைக்குத்தான் உன் முகத்துல, மனசுல இருந்து சிரிப்பு வர்றதைப் பார்க்கிறேன். என்ன விஷயம்னு தெரிஞ்சா அம்மாவும் சந்தோஷப்படுவேன் இல்லையா?" என்றாள், மகளை உற்று நோக்கி.

"உனக்குத் தெரியாமலா? இன்னும் இருபதே நாள்தாம்மா... அவந்தியோட அப்பா வந்துடுவார்!"

"நிஜமாவா? அப்பாடா...! அஞ்சு ஆண்டுகள் முடிஞ்சுப் போச்சா? அகிலாண்டேஸ்வரி தாயே... உனக்கு நன்றிம்மா? தன் பிள்ளையைக்கூட அஞ்சு ஆண்டுகள் கழிச்சி இப்பதான் மொத மொதல்ல பார்க்கப் போறார் இல்லே?"

"ஆமாம்மா... இதுவரைக்கும் 'போட்டோ'வுல மட்டும்தான் பார்த்துட்டு இருந்தார். அது மட்டுமில்லே, அவருக்கு பெரிய இனிய அதிர்ச்சியும் தரப் போறேன்ம்மா?"

"என்னம்மா... புதிருக்கு மேல புதிர் போடுறியா?"

"கிட்டத்தட்ட அப்படித்தான். ஆச்சரியம்மா இருக்கட்டும்னு உன்கிட்டக்கூட சொன்னதில்லே! அவர் அனுப்பின பணத்துல வீட்டுச் செலவு போக மிஞ்சினதுல என்ன சேமிக்க முடியும்? இதுநாள் வரை நான் சம்பாதிச்சது, சேமித்தது எல்லாம் சேர்த்து இருபத்தைஞ்சு லட்சத்துல அவர் பேருக்கு ஒரு 'பிளாட்' வாங்கி இருக்கேன்.

ரேகாவுக்கும், ராகினிக்கும் தலா இருபது பவுன் நகையும், கல்யாணச் செலவுக்கு ஆளுக்கு பத்து லட்சமும் பத்திரப்படுத்தி வச்சிருக்கேன்."

மகிழ்ச்சியை மீறி அதிர்ச்சி எட்டிப் பார்த்தது, கல்யாணிக்கு.

"எல்லாம் சரிதான்! அவந்திகாவுக்காக சேர்த்ததை எல்லாம்...?"

"இருக்கட்டும்மா... அவளுக்கு நாலு வயசுதானே ஆகுது? சேர்த்துடலாம். ஆனா, இந்தப் பொண்ணுங்களுக்கு வயசாகுதும்மா! கஷ்டத்தைப் புரிய வச்சு, கல்யாணம் பண்ணி வைக்கணும்னுதான்...



பணத்தை அவங்க கண்ணுல காட்டலே! மத்தபடி அதுவும் என் குடும்பம்தானே?"

"நீ ஆசைப்பட்ட மாதிரி புகுந்த வீடு அமையலேன்னாலும், இந்த வீட்ல பிறந்தியேன்னுப் பெருமைப்படறேன் சக்தி!"

மகளின் கன்னத்தை அழுத்தமாய் தட்டிக் கொடுத்தாள்.

## 17

அலுவலகத்துக்கு வந்தவளுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அது இனிய அதிர்ச்சி அல்ல!

சிவப்பாய்... வாளிப்பான எடையோடு– கண்களில் பரிதவிப்பும், கையில் இரண்டு வயதுக் குழந்தையுமாய் வரவேற்பறையில் காத்திருந்தாள் ஒரு பெண்.

"உங்களுக்காக ரொம்ப நேரம் 'வெயிட்' பண்ணிட்டிருந்தாங்க மேடம்!"

"சரி... நான் பார்த்துக்கறேன்" என்றவள், "எஸ்..." என்றாள், அவள் எதிரே வந்து.

"ச...க்...தி..."

"நான்தான்!"

"நா...ன்... அபிதா!"

"..........?!"

"அபுதாபியில் இருந்து வர்றேன். இது என் குழந்தை. இவளோட அப்பா பேரு..."

".........."

"தருண்!"

"வாட்?"

★★★

உறைந்து போயிருந்தாள் சக்தி!

அவள் முகத்தில் சிரிப்பு தொலைந்திருந்தது.

யாரிடமும் பேசுவதில்லை!

அம்மா மடியில் படுத்துக் கதறி அழுதும் மனம் லேசாகவில்லை.

"பாரேன் அவ முகத்தை! அடுத்த வாரம் புருஷன் வரப் போறான்னு இப்பவே அழுது வடியறா! இனிமே நினைச்சபடித் திரிய முடியாதில்லே?"

ரேகாவிடம் கேலி பேசினாள் மீனாட்சி, மகள் என்றும் பாராமல்!

அடுத்து வந்த நாளில் வேலையை ராஜினாமா செய்தாள் சக்தி.

'என்னாச்சு இவளுக்கு?'

வீட்டினர் குழம்பித் தீர்த்தனர்.

கடைசியாய்... தருண் வரும் நாள்!

"நேத்திக்கே அவந்திகாவை உங்க அம்மா வீட்டுக்கு கூட்டிட்டுப் போனியே... இன்னும் ஏன் வரலே? என் பிள்ளை வர்ற நேரமாச்சு!"

"ஸ்கூல்ல சுற்றுலா அழைச்சிட்டுப் போயிருக்காங்க."

"இப்ப அது அவசியமா? சரி... தருணை அழைச்சிட்டு வர, 'ஏர்போர்ட்' போகலியா?"

"நான் போகலேன்னாலும், வர்றதுக்கு வழி தெரியும் அவருக்கு!"

வாசலில் 'கால் டாக்ஸி' வந்து நிற்க...

தருண் இறங்கினான்.

லேசாக சதை போட்டு, நிறம் கூடி இருந்தது.

முகத்தில் ஒரு வித பதற்றம்.

வீட்டினர் சூழ்ந்து நிற்க,

சக்தி சுவரோரமாய் சாய்ந்து நின்றிருந்தாள்.

அவளின் அமைதி... தருணின் வயிற்றைக் கலக்கியது.

அவளை நோக்கி வந்தான்.

"ச...க்...தி!"

"வாங்க...!

"எ... எப்படி இருக்கே?"

"இப்படி என்னை 'போன்'ல விசாரிச்சுக்கூட ஆண்டுக் கணக்குல ஆகிடுச்சில்லே?"

"அது... வந்து... "

"எனக்கு இப்ப... பேச நேரமில்லே... ஒரு நிமிஷம்" என்றவள், ஒரு 'பிரிப்கேஸை'த் திறந்து சில 'பாக்ஸ்'களும், 'பைலும்' எடுத்தாள்.

"உங்க வருமானத்துல வீட்டுச் செலவு போக... சேமித்தது பதினெட்டு லட்சம். இதோ... இதுல உங்க ரெண்டு தங்கச்சிகளுக்கும் இருபது இருபது பவுன் நகையும், ஆளுக்கு பத்து லட்சமும் சேர்த்திருக்கிறேன். இது, உங்களுக்காக உங்க பேர்ல நான் வாங்கின 'பிளாட்!'. உங்களோட பதினெட்டு லட்சம் மட்டுமே இதுக்கெல்லாம் சாத்தியமாகி இருக்காதுன்னு எல்லாருக்கும் புரிஞ்சிருக்கும். என்னோட சேமிப்பு அத்தனையும் இதுக்காக செலவு ஆச்சு."

வீடே வாயைப் பிளந்தது. கூனிக் குறுகியது.

தருண் அருகில் வந்தான்.

"சக்தி... என்னாச்சு... ஏன் ஒரு மாதிரி பேசறே?"

"என்ன ஆகணும் இன்னும்? நான் உங்ககிட்டே எல்லாத்தையும் பத்திரமா சேர்த்துட்டேன்! நீங்க உங்களை, உங்க நம்பகத்தன்மையைப் பத்திரமா வச்சிருக்கீங்களா?"

"ச...க்...தி!"

"உங்க அம்மா சொன்னாங்கன்னு நம்பி- என்னைச் சந்தேகப்பட்டு- வேற வாழ்க்கை வாழ்ந்து- ஒரு குழந்தையும் பெத்து... ச்சீ... எப்படி முடியுது?"

"..........."

தலை கவிழ்ந்தான்.

வீட்டில் இருந்தவர்கள் இந்த புதிய தகவலால் விழி பிதுங்கினர்.



"இவங்க சொன்ன பழிக்காக ஆத்திரப்பட்டு, அபிதாவை மனைவி ஆக்கிட்டியா... இல்லை, உடம்பை அடக்க முடியாமலா?"- சாதாரணமாக ஒருமையில் பேசினாள்.

"இ... இல்லே... ச...க்...தி!"

"என் மேல எந்தத் தப்பும் இல்லேன்னு உங்க அப்பா சொன்னதும், அபிதாவைக் கழட்டி விட்டுட்டே? நீ யாருக்குத்தான் உண்மையா நடந்துக்குவே?"

"...........?!"

"மத்தவங்க சொல்லித்தான் உன் பொண்டாட்டி பத்தினின்னு நம்புவேன்னா... அப்ப நாம வாழ்ந்த வாழ்க்கைக்கு என்ன அர்த்தம்? அஞ்சு ஆண்டுகளா நம்பிக்கையோட காத்திருந்தேனே... அதுக்கென்ன பதிலைச் சொல்லப் போறே? ச்சீ... அணு அணுவா உன்னை நேசிச்சேனே... அதுக்கெல்லாம் அர்த்தமே இல்லாமப் பண்ணிட்டியே..."

"தப்புதான் சக்தி... ஏதோ இவங்க சொன்னதை நம்பி..."

"பிளீஸ்... உங்ககிட்ட எந்த பதிலையும் நான் எதிர்பார்க்கலே மிஸ்டர் தருண்! ஒண்ணு மட்டும் புரிஞ்சுக்கிட்டேன்... இந்த உலகத்துலே நம்ம நிழலைக்கூட நம்பக்கூடாதுன்னு! இருட்டைப் பார்த்தா அதுகூட நம்மளைவிட்டு விலகிப் போயிடுது. மனுஷன்... நீ எம்மாத்திரம்?"

"..........."

"நானிருக்க... இன்னொரு பெண்ணோட வாழ்ந்துட்டே. ஆனா, அதுக்காக நீ எனக்குத்தான் உரிமைன்னு கோர்ட்டுக்கு போய் பணத்தையும், நேரத்தையும் வீண் பண்ண விரும்பலே. இது என் விடுதலைப் பத்திரம்... பிடி!"- அவன் முகத்தில் தூக்கி எறிந்தாள்.

அரண்டு போனான் தருண்.

"ஐய்யோ... சக்தி... அவசரப்படாதே! எனக்கு நீ வேணும்... நம்ம குழந்தை மேல சத்தியமாச் சொல்றேன். இனி நான்..."

கைநீட்டி தடுத்தாள்.

"எனக்கு நீயும் வேண்டாம்... உன் சத்தியமும் வேண்டாம். நான் உனக்கு தரக்கூடிய தண்டனை என்ன தெரியுமா... என் குழந்தையை நீ என்னைக்குமே கண்ணால பார்க்கக்கூடாது."

"ச...க்...தி!"

"அந்தக் பெண் குழந்தையை நினைச்சிப் பார்த்திருந்தா... இந்தத் தப்பை செஞ்சிருக்க மாட்டே! எனக்கு வேற ஊர்ல வேலைக்கு ஏற்பாடு செஞ்சுட்டேன். என் குழந்தையையும், அம்மாவையும் அங்கே அனுப்பி வச்சுட்டேன். என் பொண்ணோட வாழற வாழ்க்கை எனக்குப் போதும். நான் போறேன்..."

"என்ன சக்தி... என்னென்னமோ சொல்றே? அம்மா... இப்படி குத்துக்கல்லாட்டம் சும்மா இருக்கியே..."

"அதானே... உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. நான்தான் தப்புப் பண்ணிட்டேன்... அவனை ஏம்மா தண்டிக்கறே?" என்றாள் மீனாட்சி.

சக்தி கோபத்துடன் சுட்டு விரலை நீட்டினாள்.

"பேசாதீங்க... நீங்கப் பேசாதீங்க... அப்புறம் நான் பேசினாத் தாங்கமாட்டீங்க..."

முறைத்துவிட்டு வெளியே வந்தாள்.

அவள் ஏற்கெனவே வரவழைத்திருந்த 'கால் டாக்ஸி' வந்திருக்க... ஏறினாள்.

"சக்தி... சக்தி... அவசரப்படாதே! இவ்வளவுப் பெரிய தண்டனையை தந்துட்டுப் போகாதே..."

தருண் ஓடி வந்து கதற... 'டாக்ஸி' புறப்பட்டது.

அவன் விழிகளில் நீர் வழிந்துகொண்டே இருந்தது.

"என்னப்பா இப்படிப் பண்ணிட்டா?"

– மீனாட்சி, மகன் கையைப் பிடிக்க...

"ச்சீ... என் வாழ்க்கையையே நாசம் பண்ணிட்டியே..."

தன் கையை உதறிவிட்டு, அழுதபடி உள்ளே சென்றான்.

★★★

பெங்களூர்!

கல்யாணி பரிமாற... சக்தியும், அவந்திகாவும் மேலும் இரண்டு



'தத்து'க் குழந்தைகளும் சாப்பிட்டனர்.

கல்யாணியின் கண்கள் கலங்கின.

கவனித்த சக்தி... புரிந்துகொண்டாள்.

"குழந்தைங்க எதிரே... என்னம்மா இது?"

"உன் வாழ்க்கை இப்படி ஆயிடுச்சே? அவசர அவசரமா வீட்டை வித்துட்டு– ஊருவிட்டு ஊர் வந்து– இவங்களை தத்தெடுத்து வளர்த்து– நாளைக்கு இவ தன்னோட அப்பா பத்தி கேட்டா...?"

"அவர்தான் செத்துப் போயிட்டாரேம்மா!"

"ச...க்...தி!"

பலமாக அதிர்ந்தாள்.

"ஆமாம்மா... செத்துட்டார். குழந்தை நாளடைவில் புரிஞ்சுக்குவா... 'லன்ஞ் பாக்ஸ்' ரெடியாம்மா? இவங்க 'ஸ்கூல் வேன்' வந்துடும்... எனக்கும் ஆபீசுக்கு நேரமாயிடுச்சு!"

கையைக் கழுவினாள்.

"அப்பவே நீ எங்க பேச்சைக் கேட்டிருக்கலாம்!"

"கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் தப்பு இல்லைம்மா! அங்கே உள்ள சில மனிதர்கள்தாம்மா தப்பானவங்களா இருக்காங்க. அதை விடுங்க... இப்ப என்ன... நான் சந்தோஷமா இருக்கேன். இந்த மூணு குழந்தைங்க போதும்மா... இதுவும் ஒரு வகையில 'கூட்டுக்குடும்பம்'தான். இதுல தப்பானவங்க யாரும் இல்ல. அதனால நிச்சயமா நான் நிம்மதியா இருப்பேன்... நீ கவலைப்படுறதை விட்ரு... சரியா?"

"ம்..."

வாசலில் வேனின் 'ஹாரன்' சத்தம் கேட்டது.

குழந்தைகளோடு... வாசலுக்கு விரைந்தாள் சக்தி.

காதல் என்றுமே தோற்பதில்லை...
சில காதலர்கள்தான் வெற்றி பெற முயற்சிப்பதில்லை.
இது, கணவன்- மனைவி பந்தத்தைக் கொண்ட
தாம்பத்தியத்துக்கும் பொருந்தும்!

(முற்றும்)